இருபாவிருபது .. பதிப்பாசிரியர் ப. இராமநாதப்பிள்ளை.
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சிதம்பரம் .. 1968.

112

(21)

உள்ளுறை

	பக்கம்
இருபாவிருபது	1
உண்மை விளக்கம்	41
செய்யுள் முதற்குறிப்பு அகராதிசை	72

———

உ

திருச்சிற்றம்பலம்

அருணந்தி சிவாசாரியார்

அருளிச்செய்த

இருபாவிருபது மூலமும் சீகாழித் தத்துவநாதர் உரையும்

———

இந்நூல் வெண்பாவானும் ஆசிரியப்பாவானும் ஒரொன்று பத்தாக மாறியந்தாதித்து முடிவதாகையால் இருபாவிருபதெனப் பெயராயிற்று. இந்நூல் முத்தகச் செய்யுளாம், தனித்தனி ஈகவல்தோறும் வெண்பாக்கள்தோறும் பொருள் முடிதலால்; எப்படித் தனித்தும் பதிபசுபாசத்தையே கூறுதலால் குளகமாம். அது வருமாறு, முன்னூலிற் பதிபசுபாசத்தைத் தெரிசித்தார் வினயதன்மையும் உத்தரமுமாம்.

இந்நூலின் பயன் யாதோவெனின் நிலையைத் திடமுண்டாக்குகை. அது வரும்படி :

கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும் - வெண்ணெய்நல்லூர்
மெய்கண்டான் என்றிருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டார் உள்ளத்துக் கண்.

(உரை) நெற்றியில் திருநயனமும் நீலகண்டமும் முதலிய வற்றை மறைத்துத் தரையிடத்து அருள மாந்தரை யிருள்நீக்கும் படி மானிட யாக்கையால் வந்தவன் திருவெண்ணெய் நல்லூரிலே வாழும் மெய்கண்ட தேவனதலால் அவனை ஒருகாற் சென்று பொருந்துவராயின் அருள்வேற்றுமையின்றி நிற்குமுறைமையை அவரே சகலாமலகம்போற் கண்டா சென்றவாறு.

உள்ளத்துக்கண் என்றது உள்ளத்தைத் கண்போலவும் அவனை ஆதித்தனைபோலவும் வேறின்மை கண்டா சென்றுமாம். இச்செய்யுள் குரு அறிவிக்கு முறைமை கூறிற்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

(விளக்கம்.) கண்ணுதல் - நெற்றிக்கண். நுதல் - நெற்றி. முக்கட் செல்வர் என்னும் திருப்பெயர் சிவபெருமானுக்கே உரியதென்ப. நெற்றிக்கண் சிவபெருமானுக்குரியதென்னும் உண்மை வருமாறு :

' பணியிய ரத்தகின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே.'' —புறநானூறு - கூ.

'' நுதலது இமையா நாட்டம்.''—அகநானூற்றுக்காப்பு.

'' நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்''

—மணிமேகலை. க. விழாவறை-செ

'' எண்ணிற வரிவளை நெறிகுழ லெழில்மொழி இளமுலைப்
பெண்ணுறு முடலினர் பெருகிய கடல்விட மிடறினர்
கண்ணுறு நுதலினர் கடியதொர் விடையினர் கனலினர்
விண்ணுறு பிறையணி சடையினர் பதிவிழி மிழலையே.''

—கூ. அடி - உ.

'' கடுவாயர் தமைநீக்கி யென்னை யாட்கொள்
கண்ணுதலோன் நண்ணுமிடம் அண்ணல்வாயில்....''

—க. எக . எ.

'' கண்ணுர் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கன்கள் களிகூர
எண்ணு நிரவும் பகலும்நான் அவையே எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணு என்னைக் கடவேனே அடிமை சால அழகுடைத்தே.''

—அ. குழைத்தபத்து - க.

கண்டக்கறை - திருநீலகண்டம். இது சிவபெருமானின் விழுமிய முழுமுதற்றன்மையினை உணர்த்தும் பெருமறையாகும். அவ்வுண்மை வருமாறு :

'' யாழ்கெழு மணிமிடற் றந்தனன்
தாவில் தாணிமுற் றவிர்ந்தன்ருல் உலகே.''

—அகநானூற்றுக்காப்பு.

'' கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே.'' —புறம், காப்பு.

'' பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே.'' —புறம், கக.

'' நண்ணென் துடியொடு தஞ்சு றெறிதரு
கண்ணி லெயினர் இடுகடன் உண்குவாய்
விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும்
உண்ணுத நஞ்சுன் டிருந்தருள் செய்குவாய்.''

—சிலப்பதிகாரம், கூ. வேட்டுவவரி.

'' வெற்புறுத்த திருவடியாற் கூற்றட் டானை
விளக்கினெளி மின்னினெளி முத்தின் சோதி
ஒப்புறுத்த திருவுருவத் தொருவன் தன்னை
ஒதாதே வேத முணர்ந்தான் தன்னை
அப்புறுத்த கடல்நஞ்ச முண்டான் தன்னை
அமுதுண்டார் உலந்தாலும் உலவா தானை
அப்புறுத்த நீரகத்தே அழலா னானை
ஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே.'' —க. உசு - உ.

மெய்கண்டார் என்னும் திருப்பெயர், அவர்தம் ஆசிரியர் பரஞ் சோதி முனிவரால் அருளிச்செய்யப்பட்ட மெய்யுணர்வுப் பெயர். அப் பெயரும் பரஞ்சோதிமுனிவனுரின் ஆசான் திருப்பெயர். அதுவே நம் மெய்கண்டார்க்கு ஏற்புடைச்சிறப்புப் பெயரு மாயிற்று. அவ்வுண்மை வருமாறு :

'' பொய்கண்டார் காணுப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ.''

—தாயுமானவர் - எந் - குரு - கூ.

புனிதாத்துவிதம் - சுத்தாத்துவிதம். அஃதாவது ஒன்றும் வேறு யுடனும் ஒட்டிவாழ் செம்பொருளோ, டென்றுமுயிர்க் குண்டிப் புணர்ப்பு-அத்துவிதம், மேலும் இதனை நன்குணர்த்தும் உண்மை வருமாறு :

'' பொய்காட்டிப் பொய்யகற்றிப் போதானந் தப்பொருளாம்
மெய்காட்டும் மெய்கண்டாய் விண்ணப்பம்—பொய்காட்டா
மெய்யா திருவெண்ணெய் வித்தகா சுத்தவிளு
ஐயாநீ தான்கேட் டருள்.'' —உண்மை விளக்கம், க.

நயனம் - கன். கன்டம் - கழுத்து; (மிடறு.) மாந்தர் - மக்கள். இருள் - ஆணவ வல்லிருள்; அறிவை மறைப்பது. கரதலாமலகம் - உள்ளங்கை நெல்லிக்கனி. ஆமலகம் - நெல்லி; நெல்லிக்கனி. கரதலம் - கையிடம், உள்ளங்கை. (க)

கண்ணகன் ஞாலத்துக் கதிரவன் ருனென
வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவ
காரா கிரகக் கலியாழ் வேணுகின்
பேரா வின்பத் திருத்திய பெரும
வினவ லாரு துடையேன் எனதுளம்
நீங்கா நிலைமை யூங்கு முளையால்
அறிவின் மைமலம் பிறிவின் மையெனின்
ஒராலிை யுணர்த்தும் விராய்கின் றனையேல்
திப்பியம் அத்தோ போய்ப்பகை யாகாய்
சுத்தன் அமலன் சோதி நாயகன்
முத்தன் பரம்பர னெனும்பெயர் முடியா

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

வேறுநின் றுணர்த்தின் வியாபக மின்றுய்ப்
பேறுமின் றுகும் எமக்கேம் பெரும
" இருநிலந் தீநீர் இயமானன் காலெனும்
பெருநீலத் தாண்டவம்" பெருமாற் கிலாதலின்
வேறே உடனே விளம்பல் வேண்டுஞ்
சீறி யருளல் சிறுமை யுடைத்தால்
ஆறியாது கூறினை யபக்குவ பக்குவக்
குறிபார்த் தருளினங் குருமுத லாயெனின்
அபக்குவம் அருளினும் அறியேன் மிகத்தகும்
பக்குவம் வேண்டிற் பயனில நின்னுற்
பக்குவ மதனுற் பயன்நீ வரினே
நின்னைப் பருவம் நிகழ்த்தா தன்னே
தன்னைப் பரிவி யென்பதுந் தகுமே
மும்மலஞ் சடமணு மூப்பிள மையின்நீ
நின்மலன் பருவம் நிகழ்த்திய தியார்க்கோ
உணர்வெழு நீக்கத்தை ஓதிய தெனினே
இணையிலி யாயினை யென்பதை யறியேன்
யானே நீக்கினுந் தானே நீங்கினுங்
கோனே வேண்டா கூறல் வேண்டுங்
" காண்பார் யார்கோல் காட்டாக் காலெனும்"
மாண்புரை யுணர்ந்திலை மன்ற பாண்டியன்
கேட்பக் கிளக்கு மெய்ஞ்ஞானத்தின்
" ஆட்பா லவர்க்கருள்" என்பதை யறியே.

(உரை) கண்ணகன் ஞாலத்துக் கதிரவன் ருனை - இடமகன்ற புடவியில் ஆதித்தனொக்க (இதன்றிக் கண்ணிவிட்டு இருள் மறைப்பு நீங்கிய உலகத்தை இரவி கிரணத்தாலே இருளோட்டி அந்த ஞாலத்தைக் காட்டிய முறைமைபோல என்பாருமுளர்); வெண்ணெயத் தோன்றிய மெய்கண்ட தேவ - ஆணவமலத்தாலே மறைப்புண்டு கிடந்த என்னைக் காட்டுதற்குத் திருவெண்ணெய் கல்லூரிலே தோன்றியருளும் மெய்கண்டதேவனே; காரா கிரகக் கவி யாழ்வேனை நின் பேரா இன்பத்து இருத்திய பெரும - கவியாகிய அஞ்ஞானச் சிறையிலே யகப்பட்டுத் துக்கமுற்றழுந்தும் என்னை உனது நீங்காத ஆனந்தத்திலே யிருத்தி வைத்த தலைவனே; வினவலாஞ துடையேன் - அடியேன் தேவரீரை யொருவினவுதற் குடையேனுகின்றேன் அமையாதவனு

தலால், அவ்வினவாவது; எனதுளம் நீங்கா நிலைமை யுங்கும் உரையால் - என்னிடத்து விட்டு நீங்காமல் நிற்கு முறைமை அனுபவத்திலு முண்டாவையாகையால்; அறிவின்மை - அப் பொழுது தேவரீரை யறியாதிருப்பா னேனென்ன; மலம் பிரிவின்மை யெனின் - மலம் நீங்காமையால் தெரிந்திலை யெனின்; ஓராவினை யுணர்த்தும் - ஆனால் இப்பொழுது தேவரீர் இந்த அறியாமல் (= அறியாமை) போமளவும் ஓரிடத்தாதுக்க நீங்காதிராவினவினவில்: விராய் நின்றனையேல் - எவ்விடத்தும் நிறைந்தும் நிற்பேனென்று சொல்லுகின்றீராயின், இப்பியம் அந்தோ பொய்ப்பகையாகாய் - ஈதொரு தெய்வீகமானதோர் ஆச்சரியம், அப்படியிருளோடு கூடி நிற்கிலும் இருட்குப் பகையாவனென்பது மில்லையாம் அதுவுமின்றி; சுத்தன் - மலன் சோதி நாயகன் முத்தன் பரம்பர னெனும்பெயர் முயா அனுசுத்தன் நின் மலன் ஒங்கொளி பாசப்பகைவன் ஆனபடியாலும் அவற்றினும் மேலாகிய பரன் என்னும் பெயர் உமக்குண்டாகையாலும், வேறுநின் றுணர்த்தின் வியாபக மின்றுய்ப் பேறு மின்றுகும் எமக்கு எம் பெரும - அத்தன்மை கூடிநிற்றலின்றி வேற்றுமையாக நின்று அறிவிப்பே னென்னின் வியாத்தனென்பது மில்லையாய்ச் சாயுச்சியப் பேறும் எமக்கில்லையாம், எங்கோவே; (வியாத்த மின்றுய் என்பதற்கு ஆன்மாவை நீங்கின் றறிவிப்பே னென்னின் ஆன்மாவுக் கறிவில்லை யென்று சொல்லுவாருமுளர்;) இருநிலந் தீநீர் இயமானன் காலெனும் பெருநீலத் தாண்டவம் பெருமாற் கிலாதலின் - 'இருநிலனுய்த் தீயாகி' (அப்பர் 6 : 94 : 1) என்னுந் திருப்பாட்டின்படி நின்றவையுடையே னென்கிறதுந் தலைவனே யுனக்கில்லை யாதலால்; வேறே உடனே விளம்பல்வேண்டுஞ் சிறியருளல் சிறுமையுடைத்தால் - தேவரீர் நிலைமை வேற்றுமை யாயோ வேறறக்கூடியோ நிற்பதென்று அருளல் வேண்டும், ஆன்மாவுக்கு அஞ்ஞானமே குணம் ஆதலால் தேவரீர் திருவுள்ளங் கோபமுண்டாவதல்ல; அறியாது கூறினை அபக்குவ- அபக்குவனுகையாலே இரவியுங் கண்ணும் இருளும்போல நின்ற நிலைமை யறியாது கூறினை; பக்குவக்குறி பார்த் தருளினம் குரு முதலாய் எனின் - பக்குவமாகியவனைப் பார்த்து நாம் குருவாய் வந்து தோன்றுவோமென்று அருளினையாயின்; அபக்குவம் அருளினும் அறியேன் மிகத்தகும் பக்குவம் வேண்டிற் பயனில நின்னுல் - தேவரீர் குருவாயெழுந்தருளியுபதேசிக்கிலும் அபக்குவனுதலாலறியேன், மிக்க பக்குவம் வேணுமாயின் தேவரீரை வழிபட வேண்டாம், அந்தப் பக்குவத்தையே வழிபட வேண்டுமத்தனை; பக்குவ மதனுற்பயன் நீ வரினே - அப்படியன்று, பக்குவமுண்டாவதுந் தேவரீர் எழுந் தருளுகின்றதென் றருளினீராகில்; நின்னைப் பருவம் நிகழ்த்தாது

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
CC-0. In Public Domain. Digitized by Agam Nigam Funding Shaiva Heritage Foundation, Kolkata and TKS-MOE

அன்னே தன்னெப்பாரிலி என்பதுந் தகுமே - தேவரீரைப் பக்குவம் அறிவிக்கமாட்டாது, அறிவிக்குமாகில் அந்தப் பக்குவம் முதலியாம்; அதனல் தேவரீர் இணையிலி யென்பதும் ன்றுமே; மும்மலஞ் சடமணு மூப்பிளமையில் நீ நின்மலன் பருவம் நிகழ்த்தியது யார்க்கோ - அந்தப் பக்குவம் மலங்கட்கென்னில் அவை சடமாதலால் அதற்கு வேண்டாம், ஆனமாவுக் கென்னின் மூப்பிளமை யில்லையாதலால் ஆனமாவுக்கும் வேண்டாம், தேவரீர்க் கென்னின் தேவரீர் நின்மலனுதலால் தேவரீர்க்கும் வேண்டாம், இப்பக்குவம் யார்க்கு நிகழ்த்தியதோ வென்னின்; உணர்வெழும் நீக்கத்தை ஒதிய தெனினே - இருவினை யொப்புஞ் சத்திநிபாதமு முண்டாய் ஞானம் பிரகாசிக்குமிடத்து மறைப்பு நீங்குமவதரத் தைக் காணப் பக்குவ மென்றியாயின்; இணையிலி யாயினை யென்பதை யறியேன் - தேவரீர்க்கும் இணையிலி யென்பதில்லை யாதலினின்; பானே நீக்கினும் தானே நீங்கினுங் கேனே வேண்டா கூறல் வேண்டும் - அவ்விருள் பக்குவத்திலே தானே நீங்குமாயினும் நானே நீக்குவேனுயினும் தேவரீர் வேண்டா வாம், இத்தன்மை யருளவே [illegible] வரு முறைமை; காண் பார் யார்கொல் காட்டாக்கா [illegible] ரை யுணர்ந்திலை மன்ற பாண்டியன் கேட்பக் கி [illegible] த்தின் ஆட்பால வர்க்கருள் என்பதை யறியே - 'ஆ [illegible] லாரொருவ ராடா தாரே' (அப்பர் 6 : 95 : 3) என்னும் [illegible] பாட்டிலே 'காண்பா ரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே' யென்றதை நிச்சயமாக அறிந்தாயில்லை, அதுவுமன்றிப் பாண்டியன் காண எழுதி வைகை யிலிட்ட மெய்ம்மைப் பொருளில் 'ஆட்பா லவர்க்கருளும் வண்ண மும்' (சம்பந்தர் 3 : 54 : 4) என்னும் திருப்பாட்டின்படி கொள் வதுவே அறிவே னென்றவாறு.

இச்செய்யுள் சிவன் முன்பு இருளாய் இப்பொழுது வெளியா வானேனென்ன, உன்னுடைய பக்குவ ஈனமென்ன, அப்படிப் பக்குவத்தாலே நீர் வருவீராயிற் பக்குவமே முற்பட்டதென்ன, பக்குவமென்று வேறொரு முதலில்லை, ஆன்மாவுக்கு அறியாமையே அபக்குவம் அறிவே பக்குவமென்ன, ஆனல் அறிவு வந்து இருள் நீங்குமளவில் நானே நீக்கினேனே தானே நீங்கிற்று தேவரீர் நீக்கினீரோவென்ன, இவை மூவகையுமல்லவென்று கூறியது; அதுவாவது கண்ணும் ஆதித்தனும் இருளும் படலமும்போலக் காண்பாயாக.

(வி - ம்.) ஞாலம் - உலகம். ஆதித்தன் - பகலவன்; ஞாயிறு. காராகிரகம் - சிறைச்சாலே. கலி - துன்பம். ஊங்கு - முன். தொன்மை பழமை; அனுதி. உளே - உடையாம். ஒரால் - நீங்குதல். திப்பியம் தெய்வீகம். முதலி - முதன்மையுடையது. தொன்மையிலேயே இதை

யாகிய பதியும், உறையாகிய பசுவும், சிறையாகிய பாசமும் ஒரிட மாகிய திருவருட் பெருவெளியில் தங்கியுள்ளன. பாசம் பதியைப் பற் றுமல் பசுவைப் பற்றியுள்ளது. பாசம் - ஆணவமலம். அறியாமையை அகற்றும் ஆசான்போன்றும், நோயை நீக்கும் மருத்துவன் போன்றும் பதி பசுக்களின் பாசத்தை நீக்குபவன் ஆவன். ஆசானும் மருத்துவனும். முறையே நூலும் மருந்தும் இடமுங் கொண்டு உடனுய்கின்று அவற்றை நீக்குவது போன்று பதியும், வினைமருந்தும் உடல் உலகமாகிய இடங் களும் கொண்டு பாசத்தை அடக்கி அருளுகின்றனன். பேரிருளாகிய பாசம் பேரொளி யாகிய பதியின்முன் நிற்கமாட்டாது. சிறப்பில் மட்டும் அன்றிப் பிறப்பினிலும் பதி பசுக்களுடன் பிரிப்பின்றி நீக்கமற நிறைந்து நின்றருளுகின்றனன். அங்ஙன மிருந்தும் பாசம் பசுக்களை விட்டு நீங்காமலிருப்பதற்குக் காரணம் என்னை என்பதே திருப்பாட்டின் வினு. இவ்வினுவுக்கு விடையாக, ஞாயிறும், கண்ணும் படலமும் ஒரிடத்து ஒருங்கிருப்பினும், கண்ணின் படலம் உரிக்கப்பட்ட பின்பே ஞாயிற்றின் ஒளிக்கதிர் கண்ணிற்பட்டு கண்ணொளியை விளக்கும். கண் பசுவையும், படலம் பாசத்தையும், ஞாயிறு பதியையும் ஒக்கும். கண்ணிற்படலத்தைக் கண்மருத்துவன் உடனே உரித்து விடுவதில்லை, அப்படல நோயை மருந்திட்டு முதிர்வித்துப் பின்னரே உரித்து நீக்குவன்.

அதுபோன்றே இறைவனும் தன் ஆதிசத்தியாகிய மறைப்பாற்ற லால் பாசத்தை முதிர்வித்து அதனை நீக்கியருள்வன். மறைப்பாற்றல் - திரோதானசத்தி. இவ்வுண்மை வருமாறு :

" அருக்கன்நேர் நிற்பினும் அல்லிருளே காணுர்க்
கிருட்கண்ணே பாசத்தார்க் கீசன்—அருட்கண்ணுற்
பாசத்தை நீக்கும் பகலலர்த்தும் ஞாமரைபோல்
நேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்."

—சிவஞானபோதம், சக. உ - க. (உ)

அறிவறி யாமை யிரண்டும் அடியேன்
செறிதலான் மெய்கண்ட தேவே—அறிவோ
அறியேனே யாதென்று கூறுகேன் ஆய்ந்து
குறிமாறு கொள்ளாமற் கூறு.

(உரை) அறிவு அறியாமை யிரண்டும் அடியேன் செறிதலால் மெய்கண்ட தேவே அறிவோ வறியேனே யாதென்று கூறுகேன் ஆய்ந்து குறிமாறு கொள்ளாமற் கூறு - தேவனே கண்போல இருளிலே கூடினபோது இருளாய் அறிவற்று ஒளியோடு கூடின போது ஒளியாய் அறிவுண்டாயுஞ் செய்யும் கண்போலவென்றீர், மெய்கண்டதேவனே, அறிவும் அறியாமையும் அடியேன் கூடி யறிதலால் இந்த அறிவாகிய சிவமோ யான் அறியாமையாகிய பாசமோ வென்ன எனதுண்மையை மாறுபடாமல் இந்த வழியை ஆராய்ந்தருளென்றவாறு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

இச்செய்யுள், அறிவோடு கூடினபோது அறிவாயும் அறியாமையோடே கூடினபோது அறியாமலுமாகில் ஆன்மாவின் உண்மை யாதென்றதற்கு உத்தரம் : ஆன்மா அறிவிக்க அறியும், அறிவு கூடி அதுதானுயிருக்கும் ; இதற்குச் சதசத்தென்றும் பெயராம்.

(வி - ம்.) உயிர் சார்ந்ததன் வண்ணமாய் நிற்குந் தன்மைத்து. இஃது "இருளிறலியாது இரண்டலா ஆன்மா" என்னும் சிவஞான போத ஏழாம் நூற்பார்வானும், "இரண்டுமிலித் தனியனேற்கே" (கூ0) என்னும் திருவாசகத்திருப்பாட்டானும் உணரலாம். சார்புடையது ஒன்றோடு உறைந்திருப்பதால் உறைவி எனப்படும்.

சத்து தோற்றமழிவின்றி என்றும் ஒருபடித்தாயிருப்பது. அசத்து காரணகாரியத் தொடர்ப்பால் தோற்றமாற்றமுடையது. சத்து-பதி. அசத்து - மாயாகாரிய உடலுலகுகள். உயிர் இவ்விரண்டினையும் சார்ந்துநிற்பது. அதனால் சதசத்து என்னும் பெயர் அவ்வுயிர்க்கு வழங்குகின்றது. இவ்வுண்மை வருமாறு :

"அறியாமை சாரின் அதுவாய் அறிவாம்
நெறியான போததுவாய் நிற்கும்—குறியா
சதசத் தருளுணர்த்த தானுனரா னின்ற
விதமுற் றறிவெனும்பேர் மெய்."

—தாயுமானவர், உ அ. உடல் பொய்யுறவு-உ. (கூ)

கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
வேறு கிளக்கின் விகற்பங் கற்பங்
குரோதம் மோகங் கோலையஞர் மதநகை
விராயேண் குணனுமா ணவமென விளம்பினை
அஞ்ஞா னம்போய் அயர்வே மோகம்
பைசால சூனியம் மாச்சரி யம்பயம்
ஆவேழ் குணனும் மாயைக் கருளினை
இருத்தலுங் கிடத்தலும் இருவினை யியற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவலென் றெடுத்த
அறுவகைக் குணனுங் கருமத் தருளினை
ஆங்கவை தானும் நீங்காது நின்று
தன்வழிச் செலுத்தித் தானே தானுய்
என்வழி யென்பதொன் றின்ரு மன்ன
ஊரும் பேரு முருவுங் கொண்டென்
ஊரும் பேரு முருவுங் கெடுத்த
பெண்ணை சூழ்ந்த வெண்ணையம் பதியிற்
சைவ சிகாமணி மெய்யர் மெய்ய

மும்மலஞ் சடமென மொழிந்தனை யம்ம
மாறுகோள் கூறல் போலுந் தேறுஞ்
சடஞ்செய லதனைச் சார்ந்திடு மெனினே
கடம்பட மதனுட் கண்டில விடம்படும்
ஊன்றிரள் போன்ற தாயில் தோன்றி
யணைந்தாங் ககறல் வேண்டுங் குணங்களும்
பன்மையின் ருகும் எம்மைவந் தணைந்த
தானே மாட்டா தியானே செய்கிலன்
நீயோ செய்யாய் நின்மல னுயிட்டு
இயல்பெனிற் போகா தென்றும் மடிகேடப்
பந்தம் வந்த வாறிங்
கந்த மாதி யில்லாய் அருளே.



(உரை) கூறிய மூன்று மலத்தின் குணக்குறி வேறு கிளக்கின் விகற்பங் கற்பங் குரோதம் மோகங் கொலை யஞர் மத நகை விராய் எண் குணனும் ஆணவமென விளம்பினை - சொல்லப் பட்ட மும்மலங்களின் குணம் ஆணவமலத்துக்கு வேற்றுமை யாகச் சொல்லுமிடத்து, பிடித்தது விடாதாகை - க, மோகமிகுத் துச் சொல்லுகை - உ, கோபமிடையருமை — ங, அறியாமை விஞ்சுதல் -- ச, கொலைத்தொழில் நினைவு விஞ்சுதல் — ஞ, எப் பொழுதும் வருத்த முறுதல் - ஈ, யானெனது விஞ்சுதல் - எ, மாச்சரியம் விடாநகை - அ, இவை எட்டும் ஆணவமலத்தின் குணமாம் ; அஞ்ஞானம் பொய் அயர்வே மோகம் பைசால சூனியம் மாச்சரியம் பயம் ஆவேழ்குணனும் மாயைக் கருளினை - பல கலை கற்றும் அறியாமை - க, களவுசெய்கை - உ, கண்டது மறுத் தல் - ங. அறிந்தது மறுத்தல் - ச, அழகு பொருந்த உண்டா யும் ஈயாமுகை - ஞ, அத்தத்தின் மேலே மாச்சரியம் - ஈ, அழுக்கருமை - எ ; இவை ஏழும் மாயைக்குள்ள குணமாம் ; இருத்தலுங் கிடத்தலும் இருவினை யியற்றலும் விடுத்தலும் பரநிந்தை மேவல் என்று எடுத்த அறுவகைக் குணனுங் கருமத் தருளினை - மடிவந்திருத்தல் - க, பொருப்பற்றுக் கிடக்கை - உ, புண்ணியத்தைச் செய்கை - ங, பாவத்தைச் செய்கை - ச, தொழிலைச் செய்யாமல் விடுகை - ஞ, பரநிந்தனை செய்கை - ஈ, என ஆறு குணங்களுங் கன்மத்துக் கென்றருளிச் செய்தாய் ; ஆங்கவை தானும் நீங்காது நின்று தன்வழிச் செலுத்தித் தானே தானுய் என்வழி யென்பதொன் றின்ரும் மன்ன - எட்டு ஏழு ஆறு குணங்களையுடைய ஆணவம் மாயை கன்மமென்று சொல்லப்பட்டவை அறியாமையாயும் தனுசரணதியாயும் மனை

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

வாக்குக் காயங்களால் வரும் இதமகிதங்களாயும் நீங்காமல் நின்று தன்தன் வசங்களிலே என்னையாக்கித் தானே தானுகிநின்று என்னை நீங்கியறிய என்வழி யில்லையாகா நின்றது, தலைவனே; ஊரும் பேரும் உருவுங்கொண்டு என் ஊரும் பேரும் உருவுங் கெடுத்த பெண்ணை சூழ்ந்த வெண்ணெயம்பதியிற் சைவசிகாமணி மெய்யர் மெய்ய - உனக்குத் தனித்தொரு ஊரு மில்லையாயினும் ஊரின்னதென்றும், எல்லாம் பேராயிருக்கவும் பேரின்ன தென்றும், எல்லாம் உருவாயிருக்கவும் உருவின்ன தென்றுங் கொண்டெழுந்தருளி வந்து, தானெழிந்தெனக்கு ஊரும் பேரும் உருவுமில்லை என்னும்படி நீக்கிப் பெண்ணையாற்றுப் புனல் சூழப் பட்ட வெண்ணெய் நல்லூரில் வந்தவன் சைவசித்தாந்தத்துக் கோர் அபிடேக இரத்தினமாகியவன் மெய்யர்க்கு மெய்யனைய மெய்கண்டதேவனே முன்னே; மும்மலஞ் சடமென மொழிந்தனையம்ம மாறுகோள் கூறல் போலும் - மூன்றுமலமுஞ் சடமெனக் கூறினும் நீதோரிச்சரியம், முன்னெடுபின் மாறுபடுமதாகாதின்றது; தேறுஞ் சடஞ்செயலதனைச் சார்ந்திடு மெனினே கடம்பட தனுட் கண்டில - இப்படி யிருபத்தொரு விதமான ஆணவம் யை கன்மங்களுஞ் செயலிச் சாராது சாருமாயில் சடமாகிய கட தாதிகளிடத்துக் காணப்பட்டதில்லையே யெனின்; விடம்படும் ஊன்றிரள் போன்றதாயில் தோன்றி யகீணந்தாங்கு அகறல்வேண்டும் - உடலிக்கரந்த நஞ்சு உடலைப் பேதித்துத் தனக்கறிவில்லையினும் விகாரங்களைச் செய்விக்குமா போல வென்னின், அவை போலஒருகால் தான்றிநீங்கிவிடவேண்டும் அதுவுமின்றி; குணங்களும் பன்மையின்றுகும் - வெவ்வேறுக எட்டும் ஏழும் ஆறுமாகப் பலவகைக் குணங்களு மில்லையாம்; எம்மைவந்து அணையத் தானே மாட்டாது-இம்மலங்கள் என்னைவந்து தானே கூடமாட்டாது; யானே செய்கின்ற - யான் மலங்களை யறிந்து கூடிக்கொள்வ தில்லை; நீயோ பாய் நின்மலனுயிட்டு-உன்னுற் செய்விக்கப் படுமெனின் நீ மலனுதலாற் கூடிச் செய்விப்பதுமில்லையாம்; இயல்பெனிற் போகாது - ஆன்மாக்களுக்குத் தானே வந்து கூடுவது நின்பெனில் முத்தியிலும் வந்துகூடும்; என்றும் யல்கெட தாதும் மயக்கங் கெட; பந்தம் வந்தவாறு இங்கு ந்தமாதி அருளே - எமக்குப் பாசங்கூடிய வழியை முடிவும் சாற்று தவனே சொல்லென்றவாறு.

இச்செய்யுள், ஆன்மாவுக்குப் பாசம் கூடியமுறைமையும் நீங்கியமுறைமையும் எப்படி என்று வினவ அதற்குத்தரம்: செம்புக்குக் களிம்புபோல ஆணவம் பொருந்தியது காரணமின்றி அனுதியேயுள்ளதாம்; அஃது அனுதியாகவே செம்புக்குக் களிம்பும் அனுதியாகச் சிவப்பும் சாற்று [மு]ம் கூடிக்கிடக்குமாப்போல மும்

மலங்களும் ஆன்மாவுக்கு அனுதியாம். சத்தியாலே கூட்டியும் பிரித்துஞ் செய்வனென்பது கருதது. பாசத்துக்கு நின்ற நிலைமை கண்டதொழிந்து அதற்குப் போக்குவரத்தில்லையென்பது பொருந்தப் பொருளாம்.

(வி - ம்.) ஆணவமலத்தின் குணங்கள் எட்டின் உண்மை வருமாறு:

" கருணைமொழி சிறிதில்லேன் ஈத லில்லேன்
கண்ணீர்கம் பலியென்றன் கருத்துக் கேற்க
ஒருபொழுதும் பெற்றறியேன் என்னை ஆளும்
ஒருவாவுன் அடிமைகான் ஒருத்த னுக்கோ
இருவினையும் மூக்குணமும் கரண நான்கும்
இடர்செய்ஐம் புலனுங்கா மாதி யாறும்
வரவரவும் ஏழைக்கோ ரெட்ட தான
மதத்தொடும்வந் தெதிர்த்தகவ வ்டிவ மன்றே."

—தாயுமானவர், கசு. பன் - உ.

" ஆணவமாம் மலம்உயிரை அணுகி யாக
அகத்துள்மணி அரவுசெம் பிடைஅமருங் களிம்பும்
பேணுநீர் உப்புடனே நெருப்படங்கும் விறகும்
பெருகுநெல்லில் தவிடும் பிறங்குகண்ணில் இருளும்
காணுமது போலென்றும் ஒன்றுபல னேகம்
கலைகள்சத்தி யாய்க்காலங் தொறுங்குறைதல் செய்து
கோணுதல்ஒன் றின்றியே ஏனுயிரை மறைத்துக்
குறித்திடலாம் வகைநிற்கும் நிறுத்துமது கேளே."

—தத்துவப்பிரகாசம் - சஉ.

கலை - தொழில். கோணுதல் - வேறுபடுத்தல். ஏன் - வலி.

மாயையின் குணங்கள் ஏழு: அத்தம் - பொருள்.

இருவினையின் குணங்கள் ஆறு: பரசிந்தனை, பிறரை இகழ்தல்.

மும்மலங்களையும் தொழில்படுத்துவது ஆதியாற்றல். அவ்வண்மை வருமாறு:

" திரோதமலம் இறைசத்தி ஆன்மாவைக் கன்மம்
சேருமள வாகுமலச் செறிவுநீங் களவும்
விரோதமுறை போலொக்க மறைப்பாக நின்று
மிக்கதுதான் மிகுமாயை விரித்தறிவு பொருத்தி
வரோதயமாம் வேதங்கள் பலகலைகள் ஆய்ந்து
வரினும்அறி யாதவகை நிரவும்அதை னல்இப்
பராவருளே மலமெனவும் பகர்வர்அது தானே
பரமனையுங் கருணையினுல் தெரிவுறப் பண்ணிடுமே."

— தத்துவப்பிரகாசம். இச (ச)

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அருள்முன்பு நில்லா தடியேற்குக் கண்ணின்
றிருள்கண்ட வாறென்கொல்? எந்தாய் - மருள்கொண்ட
மாலையா வெண்ணெய்வாழ் மன்னவா என்னுடைய
மாலையா மாற்ற மதி.

(உரை) அருள் முன்பு நில்லாது அடியேற்குக் கண்ணின்று இருள் கண்டவாறு என் கொல் எந்தாய் மருள்கொண்ட மாலையாய் வெண்ணெய் வாழ் மன்னவா என்னுடைய மால் ஐயா மாற்ற மதி-இப்படிக் கூடிய மலங்களே இப்பொழுது நீக்குமளவில் அருள் கூடில் இருளும் வெளியுமாய் நில்லாது அடியேனுக்கு அருளொழிய வேறிடமில்லை நின்று நீக்க ஆகலால் இருளையறிந்தவழி எப்படி, எம்முடைய சுவாமியே, மணம் பொருந்திய மாலையினையுடையாய், திருவெண்ணெய் நல்லூருக்குத் தலைவனுகிய மெய்கண்டதேவனே, எனக்குண்டாகிய மயக்கத்தை ஐயா போம்படி இதுவென்று புத்தி பண்ணுவாயாக என்றவாறு.

இச்செய்யுள், சதசத்தாகிய ஆன்மா இருளை நீங்கின தெப்படியென வினவ அதற்குத்தரம்: 'சத்தி தொடுத்தன் தானறியா நின்றமுறை - வைத்தலது சுத்தியா வை.'

(வி - ம்.) நான்காவது வரியின் மால் - மயக்கம். ஐயா - தலைவனே. திருவருளோடு தான் கூடிநிற்கு முறைமை அறியவொட்டாது மறைத்துக் கொண்டிருந்த காலத்து அவ்வுபீர் அறியாதிருந்தது திருவருள் பிறைத்திங்கள் போன்று சிறிது சிறிதாகப் பதிய மலமும் சிறிது சிறிதாகத் தேய்ந்து ஒடுங்கிற்று. ஒடுங்கவே நிறைமதிபோல் திருவருள் மேலோங்கும். அப்பொழுது உயிர் அத்திருவருளால் அதனுடன் கூடியிருக்கும் முறைமையினை யறியும். இவ்வன்மை வருமாறு:

" மன்னும் இருளை மதித்துரந்த வாறன்பின்
மன்னும் அரனே மலந்துரந்து—தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் தான்."

—சிவஞானபோதம், சக - உ - உ. (சி)

மதிநுதல் பாக ளுகிக் கதிதர
வெண்ணெய்த் தோன்றி நண்ணியுள் புகுந்தென்
உளம்வெளி செய்துன் அளவில் காட்சி
காட்டியேற் காட்டினை எனினும் நாட்டிஎன்
உண்மையும் பெருமையும் நுவலில் அண்ணல்
பாதாள சத்தி பரியந்த மாக
ஓதி யுணர்ந்த நானே ஏக
முழுதும்நின் றனனே முதல்வ முழுதும்

புலன்கடைப் பூழை நுழைந்தனன் கலங்கி
ஆங்கைந் தவத்தையும் அடைந்தனன் நீங்கிப்
போக்கு வரவு புரிந்தனன் ஆக்கி
எவ்விடத் துண்மையும் இவ்விடத் தாதலுஞ்
செல்லிடத் தெய்தலுந் தெரித்த மூன்றினும்
ஒன்றெனக் கருளல் வேண்டும் என்றும்
இல்ல திலதாய் உள்ள துளதெனுஞ்
சொல்லே சொல்லாய்ச் சொல்லுங் காலைச்
சிறுத்தலும் பெருத்தலு மிலவே நிறுத்தி
யானே யெறும்பி னெனது போலெனின்
ஞான மன்றவை காய வாழ்க்கை
மற்றவை யடைந்தன வுளவெனின் அற்றன்று
விட்ட குறையின் அறிந்து தொன்று
தொட்டுவந் தனவென வேண்டும் நட்ட
பெரியதிற் பெருமையுஞ் சிறியதிற் சிறுமையும்
உரியது நினக்கே யுண்மை பெரியோய்
எனக்கின் றுகும் என்றும்
மனக்கினி யாயினி மற்றது மொழியே.

(உரை) மதிநுதல் பாகனுகிக் கதிதர வெண்ணெய்த் தோன்றி நண்ணியுள் புகுந்து என்னுளம் வெளிசெய்து உன் அளவில் காட்சி காட்டி எற் காட்டினை - மதிபோலும் நுதலினை யுடையாளைப் பாகத்திலுள்ள நீ எனக்கு முத்திதரவேண்டித் திருவெண்ணெய் நல்லூரிலே தோன்றி என்னை யாண்டருள்வதாய் உள்புகுந்து என்னுள்ளத்தை வெளியாக்கி எனக்கு உனதெல்லையற்ற காட்சியைத் தெரிசிப்பித்து என்னுண்மையைக் காட்டினையாயின்; எனினும் காட்டி என் உண்மையும் பெருமையும் நுவலில் அண்ணல் பாதாளசத்தி பரியந்தமாக ஓதியுணர்ந்த நானே - அப்படியாயினி ராயின், என் தலைவனே, என் முற்பட்ட சிறுமையும் இப்பொழு துண்டான பெருமையும் எனக்கே சொல்லில் பாதாளசத்தி முதலாகத் தலைவன் தன்மையிருக நானை ஓதியுணர்ந்த துண்டாதலால்; ஏக முழுதும் நின்றனனே முதல்வ - அறிவோடு கூடினபொழுது அறிவுதானுக நிறைந்து நின்றனையில், தலைவனே; முழுதும் புலன்கடைப் பூழை நுழைந்தனன் - என் குணமான புலன்களி னுழைவழியிலே எப்பொழுதும் நுழைந்து திரிவனும்; கலங்கி ஆங்கு ஐந்தவத்தையும் அடைந்தனன் - இவ்வளவும் அறியு மாத்திரத்தானுங்

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

கலங்கிப் பஞ்சாவத்தைப்பட்டு நிற்பேன்; நீங்கிப் போக்குவரவு புரிந்தனன் - அதுவுமின்றி இவ்வுடல் நீங்கில் வாலிலும் நிரயங்களினும் போக்குவரத்துஞ் செய்து திரிவேன்; தூக்கி - இவையிற்றை ஆராயுங்காலத்து; எவ்விடத்துண்மையும் இவ்விடத்தாதலுஞ் செல்லிடத் தெய்தலுந் தெரித்து மூன்றினும் ஒன்றெனக்கு அருளல் வேண்டும் - யான் முன் எல்லாவற்றையும் ஒதியுணர்ந்த எல்லாவிடத்தும், நீங்கினவிடத்துந் தன்னுண்மையும், செபல்லப்பட்ட பரத்தொடு கூடிநிற்றலும் ஆகிய மூன்றையும் விசாரித்து இதனிலே யொன்றை உண்மையாக எனக்கருளல் வேண்டும்; என்றும் இல்லது இலதாய் உள்ளது உளதெனுஞ் சொல்லே சொல்லாய்ச் சொல்லுங்காலை - உலகத்து உள்ளதுளதாய் இல்லதில்லையா மென்னுஞ் சொல்தவருது கொள்ளுமளவில்; சிறுத்தலும் பெருத்தலுமிலவே நிறுத்தி - ஒரு காற் சிறுத்தும் ஒருகாற் பெருத்துஞ் செய்யாது ஒரு பொருள் நிறுத்தி; யாஞை எறும்பினுது போலெனின் ஞானமின்றிவை காயவாழ்க்கை -யாஞையும் எறும்பும் போலப் பெருத்துஞ் சிறுத்து மிருக்குமெனின் உடற்பெருமையுஞ் சிறுமையுமொழிந்து ஞானமல்ல அச்சொல்லை விடுக; மற்றவை யடைந்தன வுளவெனின் - அவ்விடத்தில் அவ்வுடலடைந்த ஆன்மாவும் அவ்வுடலளவுஞ் சிறுத்தும் பெருத்து முளதே யென்கின்றீராயின்; அற்றன்று - சொல்லுகிற முறைமை போலல்லர் காணும்; விட்ட குறையின் அறிந்து தொன்றுதொட்டு வந்தனவென வேண்டும் - எடுத்த உடலுக்கடுத்த அறிவாதலால் தான் பொருத்துவிட்ட குறையை யறிந்து உடல் பெருமை சிறுமை தொந்தித்து வந்தனவாக வேண்டும்; நட்ட பெரியதிற் பெரு மையுஞ் சிறியதிற் சிறுமையும் உரியது நினக்கே உண்மை - பொருத்தப்பட்ட பெரியதற்குப் பெருமையாயுஞ் சிறியதற்குச் சிறுமையாயு மிருத்தலும் உனக்குள்ளதா மூண்மையாம்; பெரியோய் எனக் கின்றுகும் என்றும் மனக்கினியாய் இளிமற்றது மொழியே - தம்பிரானே, எனக்குக் குணமில்லையாமாதலால் மனதுக்கு என்றும் இனிமை தங்கி யொருதன்மையாக உள்ளவனே இந்த முறையை யருளென்றவாறு.

இச்செய்யுள், ஆன்மாக் கூடினது தானுவலுதலால் அரு ளொடு கூடினபோது அருளாய் நிற்பவன் என்றதனை வினையது; அசற்குத்தரம்: இருளொடுகூடி இருளாய் விழித்த விழி ஒளி யொடு கூடினபோது ஒளிதானுய் நின்றது கண்டாற்போல, ஆன் மாவும் எப்போதுங் கூடினது தானுய் நிற்பன், அருளிலும் மலத் திலும் அப்படியே, அருளொடு கூடினவம்து அருளும் மலத்தொடு கூடினவற்கு மலமும் இல்லையெனபது கருத்து.

(வி - ம்.) தெரிசிப்பிக்க - காட்டியருள. பூழை - சிறுவழி; புலன் கள். புலன்கள்ஐந்து: மெய், வாய், கண், மூக்குச், செவி என்பன. ஐந் தவத்தை நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் (சாக் கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதிதம்) என்பன. நிரையம் - நரகம். தூக்குதல் - ஆராய்தல். (கூ)

மொழிந்த அவத்தை முதலடியேன் நின்ரூங்
கொழிந்தன நான்கும் உணர - இழிந்தறிந்
தேறிற்றிங் கில்லை எழில்வெண்ணெய் மெய்த்தேவே
தேறிற்றென் கொண்டு தெரித்து.

(உரை) மொழிந்த அவத்தை முதலடியேன் நின்ரூங்கு ஒழிந்தன நான்கும் உணர இழிந்தறிந்து எறிற்றிங்கில்லை எழில் வெண்ணெய் மெய்த்தேவே தேறிற்றென் கொண்டு தெரித்து - இப்படியே நீக்கித் தெரிசிக்கும் அவதரத்தில் அவத்தைகளை அடியேன் அறிந்து நீங்குமளவில் முற்படு மதீதத்தில் அடியேன் தானேயாய் நின்ற விடத்தினின்றுந் துரியஞ் சுழுத்தி சொப்பனஞ் சாக்கிரமென்னும் நாலவத்தையும் ஆராயுமிடத்துச் சாக்கிரத்திற் கருவிகள் வந்து இறங்கி யேறியதில்லை; தேவரீரது ஞானமும் வந்து பொருந்தாது; ஆதலால் அவ்விடத்திலே ஏது கருவியாக அறிந் தேன், அழகு பொருந்திய திருவெண்ணெய்நல்லூரில் மெய்கண்ட தேவனே, அருளவேண்டுமென்றவாறு.

இச்செய்யுள், அவத்தை நீங்குமிடத்து ஆன்மாவுக்குக் கருவி யேதென வினவ, அதற்குத்தரம்: 'அஞ்சாகுஞ் சாக்கிரத்தில் நான்குகனு மேலடைவே - எஞ்சாது மூன்றிரண்டொன் றென்.'

(வி - ம்.) உயிர் ஐந்தவத்தைப் படுங்காலத்து அவ்வுயிருடன் பொருந்துங் கருவிகள் வருமாறு:

புருவநடுவில் நனவு - சாக்கிரம் நிகழும். அதற்குக் கருவி அறிதற் கருவியாகிய மெய், வாய், கண், மூக்குச், செவி என்னும் ஐந்தும், செய்தற் கருவியாகியவாய், கால், கை, எருவாய், கருவாய் ஐந்தும் ஆகிய இந்திரியம் (பொறி) பத்தும், அவற்றிற்குரிய சுவையொளி ஊரூசை நாற்றம் ஐந்தும், பேசல், நடத்தல், கொடுத்தல் வாங்கல், கழித்தல், இன்புறல் ஐந்தும் ஆகிய புலன்கள் பத்தும் உயிர்க்காற்று, மலக்காற்று, தொழிற்காற்று, ஒலிக்காற்று, நிரவுகாற்று, தும்மற்காற்று, விழிக் காற்று, கொட்டாவிக்காற்று, இமைக்காற்று, வீங்கற்காற்று ஆகிய வாயுக்கள் பத்தும், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் நான்காகிய அந்தக்கரணமும், ஆள் எனப்படும் புருடன் ஒன்றுமாகிய மூப்பத் தைந்து கருவிகள் தொழிற்படும்.

கண்டத்தில் கனவு: வாயுப்பத்து, சத்தாதி வசனாதி ஆகிய புலன்கள் பத்தும், அந்தக்கரணம் நான்கும், புருடன் ஒன்றும் ஆகிய கருவிகள் இருபத்தைந்தும் தொழிற்படும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நெஞ்சத்தில் உறக்கம்; உயிர்க்காற்றும், சித்தமும், புருடனும் ஆகிய மூன்றும் தொழிற்படும்.

கொப்பூழில் பேருறக்கம்: உயிர்க்காற்றும் புருடனும் ஆகிய இரண்டு கருவிகள் தொழிற்படும்.

இந்நான்கிலும் கூ, உ, கு, உ என்னும் கருவிகள் முறையே உயிரொடுங் கூடும்.

மூலத்திடத்து உயிர்ப்படங்கல்: கருவியொன்றும் கூடாமல் புருடன்மட்டுந் தங்கியிருக்கும். துரியாதீதம் எனப்படும் மூலாதாரத்தில் தனித்து நின்ற புருடன், நனவு நிலைமைக்கு வந்தும், மற்றவற்றை நினைவுகொள்ளுதற்குக் கருவியாக நிற்பது வாக்குக்கள் நான்குமாகும். வாக்குக்கள் நான்கு வருமாறு: சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்பன. (எ)

தெரித்ததென் கொண்டேனை யுருத்திர பசுபதி
செடிய னேனையும் அடிமை செய்யப்
படிவங் கொண்டு வடிவுகாட் டில்லாப்
பெண்ணை யாளும் வெண்ணெய் மெய்ய
அவத்தையிற் றெரித்தன ஞயின் அவத்தை
தெரித்தாங் கிருத்தலு மிலனே திருத்துங்
காலம் முதலிய கருவி யாயின்
மாலும் பிரமனும் வந்தெனை யடையார்
ஓதுங் காலை யொன்றையொன் றுணரா
சேதன மன்றவை பேதைச் செயலுமிச்
சேதன வானுற் செயல்கொள வேண்டும்
போத மவற்றைப் புணர்வதை யறியேன்
கருவித் திரளினுங் காண்பதோ ரொன்றும்
ஒருவுத லறியேன் உணர்வில னுதலின்
நிற்கோடு கண்டன ஞயின் எற்குக்
கருவி யாயினை பெருமையு மிலவே
யானே பிரமங் கோனே வேண்டா
இன்னுங் கேண்மோ மன்ன நின்னின்
முன்ன மென்றன் உணர்வில னுதலின்
என்னைக் காண்பினுங் காண்பல காணு
துன்னைக் காண்பினுங் காண்பல வுன்னை
டொருங்கு காண்பினுங் காண்பல அருந்துணை
கண்டவா றேதெனது கண்ணே
அண்ட வாண அருட்பெருங் கடலே.

(உரை) தெரித்த தென் கொண்டெனை உருத்திரபசுபதி-அவத்தைக்குச் சுத்தசத்துவங்கள் கொண்டறிந்தேனுகில், சங்கார கர்த்தாவாகிய பசுபதியே, என்னை யான் அறியுமிடத்து யாது கொண்டறிந்தேன்; செடியனேனையும் அடிமைசெய்யப் படிவங் கொண்டு முடிவுகாட்டில்லாப் பெண்ணையாளும் வெண்ணெய் மெய்ய - அஞ்ஞானியாகிய என்னையும் அடிமைகொள்ளவேண்டி யாவருங்காணத் திருமேனிகொண்டருளி எல்லையிறந்தபல் லேருழவு பயில்தல் விளங்கிய திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவனே; அவத்தையில் தெரித்தனனுயின் அவத்தை தெரித்தாங்கு இருத்தலுமிலனே-அவத்தையைப் போல அறிந்தேனுயின் எல்லாம் நீங்கியவிடத்தும் அவத்தை காண்டலும் இருத்தலு முண்டாகாது; திருத்துங் காலம் முதலிய கருவியாயின் மாலும் பிரமனும் வந்தெனை யடையார் - அறிவிக்கப்படுங் காலத் தத்துவங்களைக் கொண்டறிந்தேன் என்னில் பிரம விட்டுணுக் களும் எனக்கொவ்வாதாம்; ஒதுங்காலை யொன்றையொன் றுணரா-அதுவுமன்றியும் அந்தக் கலாதிகளும் அந்தக்கரணங்களுஞ் சொல்லுமிடத்து ஒன்றையொன்று உணராது; சேதன மன்றவை பேதைச் செயலுமிச் சேதனவானுற் செயல்கொள வேண்டும் - அதுவுமன்றி அவை அறிவுடையவு மல்லவாய்ச் சடமுமாய் ஆன்மாக் கூடியல்லது செயற்படாது ஆதலாற் கருவி கொண்டறிந்தவல்லவாம்; போத மவற்றைப் புணர்வதை யறியேன்-இப்படிக் கூடி யறியச்செய்த நாமல்லோ கூடியறிகிறோ மென்று நானறியேனே; கருவித்திரளினுங் காண்பதோ ரொன்றும் - அவை தன்னை யறியுமிடத்து ஒரொரு கருவியாகவல்லது அறியமாட்டேன்; ஒருவுதலறியேன் உணர்விலனுதலின்-அக்கருவிதான் கூடுதலும் நீங்குதலு மறியேன் அறிவிலேன் ஆதலாலே; நிற்கொடு கண்டனஞயின் எற்குக் கருவியாயினை பெருமையுமிலவே - நின்னைக்கொண்டு கண்டேனுயின் எனக்கு நீ யறிதற்குக் கருவியாயினுய், நின் பெருமையுமில்லையாம்; யானே பிரமம் கோனே வேண்டாம் - உன்னை நான் கருவியாகக் கொண் டறிவேனுயின் நானே தலைவனும், நீ தலைவனுக வெண்டுவதில்லை; இன்னுங் கேண்மோ மன்ன - இவையுமன்றி யின்னமுங் கேட்பா யாக தலைவனே; நின்னின் முன்னம் என்றன் உணர்வில னுதலின் என்னைக் காண்பினுங் காண்பல - என்னை யறியுமிடத்து உன்னை உதவி யாகக் கொண்டு காணுமுறைமை யில்லாதபடி யாலே கண்டதில்லை. காணுது - என்னை யானறிவேனுகில் நானென்றும் அறிவென்றும் இரண்டாம்; உன்னைக் காண்பினுங் காண்பல - கருவிகளைக் கொண்டு உன்னைக் காண்பினுங் கண்டதல்லவாம்; உன்னோடு ஒருங்கு காண்பினுங் காண்பல - அவை யிரண்டுமின்றி உன்னைக் கொண்டு எல்லாவற்றையுங்

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

காண்பினுங் கண்டதல்ல; அருந்துணை கண்டவாறு ஏது எனது கண்ணே அண்டவாண அருட்பெருங் கடலே - உன்னைத் துணையாகக் கொண்டறிவதை வேண்டும், அஃதல்லவாயின் என்னை யானறிந்தபடி எப்படி, தேவர்கள் தேவனே யாவரும் பருகுங் கருணைக்கடலே அருளே யென்றவாறு.

இச்செய்யுள்: ஆன்மரத் தன்னையறியுமிடத்துக் கருவி யேதென வினவ, அதற்குத்தரம்: 'கண்ணுடி தானிடமாக் கண்ணதனைக் கண்டதுபோல் - உண்ணு டொளியுன் னொளி.'

உருத்திரம் - சங்காரம். பசுபதி - உயிர்த்தலைவன். (அ)

கடலமுதே வெண்ணெய்க் கரும்பேயென் கண்ணே
உடலகத்து மூலத் தொடுங்கச் - சடலக்
கருவியா தாங்குணர்த்தக் காண்பதுதா னென்னை
மருவியா தென்றுரைக்க மன்.

(உரை) கடலமுதே வெண்ணெய்க் கரும்பே என் கண்ணே உடலகத்து மூலத்தொடுங்கச் சடலக் கருவியாதாய் குணர்த்தக் காண்பதுதானென்னை மருவியாதென்றுரைக்க மன் - கடலிடத் தமுதத்தை யொப்பானே வெண்ணெய்நல்லூரில் யாவர்க்கும் இனிய கரும்பை யொப்பானே எனக்கறிவே தானறிவிக்க அறிந் தவனுயின் அவத்தையில் மூலாதாரத்திலே யானறியுமிடத்துக் கருவிகளேது அவ்விடத்துணர்த்தக் காணப்பட்டது [யாது] இவற்றைத் தெரிய இன்னதென்று சொல்லென்றவாறு.

இச்செய்யுள், ஆன்மாவுக் கதீதத்திலும் உணர்த்துமுறைமை எப்படி யென்ன வினவ அதற்குத்தரம்: அதீதத்துப் பிரகிருதி கூடி நிற்கையால் காலம் நியதி கூடும்; துரியத்துக் கலை வித்தை அராகங் கூடும். இதற்குதாரணம் (போற்றிப்பஃறொடை 27 - 35) :

மூலவருங் காட்டிலுயிர் மூடமா யுட்கிடப்பக்
கால நியதி யதுகாட்டி—மேலோங்கு
முந்திவியன் கட்டிலுயிர்சேர்த்துக் கலைவித்தை
யந்த அராக மவைமுன்பு—தந்த
தொழிலறி விச்சை துணையாக மானின்
எழிலுடைய முக்குணமு மெய்தி—மருளோடு
மன்னு மிதயத்துச் சித்தத்தாற் கண்டபொருள்
இன்ன பொருளென் றியம்பவொண்ணு—அந்நிலைபோய்க்
கண்டவியன் கட்டிற் கருவிகளீ ரைந்தொழியக்
கொண்டுநிய மித்தற்றை நாட்கொடுக்கப்—பண்டை

இருவினையால் முன்புள்ள இன்பத்துன் பங்கள்
மருவும்வகை யங்கே மருவி—உருவுடனின்
றேங்கு நுதலாய வோலக்க மண்டபத்திற்
போங்கருவி யெல்லாம் புகுந்தீண்டி—நீங்காத
முன்னை மலத்தினிருள் மூடா வகையகத்துள்
துன்னுமிருள் நீக்குஞ் சுடரேபோல்—அந்நிலையே
சூக்கஞ் சுடருருவிற் பெய்து தொழிற்குரிய
ராக்கிப் பணித்த வறம்போற்றி.

இஃது அதீதத்திலுணர்த்து முறைமை கண்டுகொள்க.

(வி - ம்.) கடலமுது - திருவருட் பெருங்கடலில் திருவுள்ளத் திருக்குறிப்பால் மீதெழுந்து பொங்கி வழியும் பேரின்பப் பேரமிழ்து.

மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை
அந்நிய மாக்கி அருள்வழி யதனுன்
என்னுள் புகுந்தனை யெனினே முன்னைத்
திரிமலந் தீர்த்த தேசிக நின்னுடு
ஒருவுத லின்றி யுடந்தையே யாகும்
பெருநிலை யாகல் வேண்டும் மருவிடு
மும்மல மதனுல் எம்முள்நின் றிலையெனின்
அம்மலத் திரிவுஞ் செம்மலர்த் தாள்நிழற்
சேர்தலு மிலவாய்ச் சார்பவை பற்றிப்
பெயர்வில னுகும் பெரும தீர்வின்று
அமைந்த கருமத் தியைந்ததை யல்லது
சமைந்தன விலவெனச் சாற்றில் அமைந்த
மாயேயங் கன்ம மாமல மூன்றும்
மாயா தனுவே யார்ச்சக மாயையின்
உற்பவந் தீரா வொழுகுமோன் றென்று
நிற்சம மாயி னல்லது நிற்பெறல்
இல்லென மொழிந்த தொல்லறந் தனக்கு
மேயா தாகும் நாயே னுளத்து
நின்றனை யென்பனை நின்றிலை யென்பனை
பொன்றிய பொன்றிற் றிலமல மென்பனை
ஒன்றினை யுரைத்தருள் மன்ற குன்றுப்
பெண்ணைப் புனல்வயல் வெண்ணெய்க் கதிபதி

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE
Center for Shaiva Studies, Pondicherry Collection

கைகண் தலைவாய் கால்செவி மூக்குயர்
மெய்கொண் டென்னினை வேரறப் பறித்த
மெய்கண்ட தேவ வினையிலை
மைகொண்ட கண்ட வழுவிலென் மதியே.

(உரை) மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை அங்கிய மாக்கி அருள்வழி யதனன் என்னுள் புகுந்தனையெனினை - தலைவனே நீ கன்மம் துலையொத்தபோது நீதானே மலத்தை நீக்கி என்னையுந் தெரிசிப்பித்து எனக்குள்ளுமாய் நின்றுயாதலால்; முன்னைத் திரிமலந் தீர்த்த தேசிக நின்னொடு ஒருவுதலின்றி உடன்தையே யாகும் பெருநிலை யாகல் வேண்டும் - இப்பொழுது மலங்களை நீக்கிய பரமகுருவே உன்னைவிட்டு நீங்குதலின்றி ஒன்று பட்டு மிகுந்த நிலையாகல் வேண்டும்; மருவிடு மும்மலமதனுள் எம்முள் நின்றிலையெனின் - அனுதியே ஆணவம் மாயை கன்மமெனு மலங்கள் என்னைக் கூடி நிற்கையால் எனக்குள்ளே நின்று யில்லையாயின்; அம்மலத்திரிவுஞ் செம்மலர்த் தாள்நிழல் சேர்தலுமிவ்வாய்ச் சார்பவை பற்றிப் பெயர்வில [illegible]ம் - அந்த மலங்கள் ஒருகாலத்திலும் விட்டுநீங்குத லில்[illegible]ச் செந் தாமரைப் பூவையொத்த திருவடிநிழலிலே கூடுத[illegible]லையாய்ச் சேர்ந்த மலத்தின் செய்தியைப்பற்[illegible]நலின்றி நிறைவேண்டும்; பெரும திர்வின்று அமைந்த [illegible]தியைந்ததை யல்லது சமைந்தனவிலவெனச் சாற்றில் [illegible]ன உடலுக்கமைத்த பிராரத்த கன்மமாகிய புண்ணிய பாவம் பொசித்துத் துலையொக்கு மளவில் மலம் பொருந்திநிற்கும், புண்ணிய பாவங்கள் துலை யொவ்வாத அவ்தரத்தும் மலம் விட்டுநீங்கா தென்னின்; அமைந்த மாயேயங் கன்ம மாமலம் மூன்றும் மாயாதாகவே ஆர்ச்சனமாயையின் உற்பவந் தீரா வொழுகு மொன்றொன்று - அந்தக் கன்ம மாயை முதலியவாகிய ஆறத்துவாவிலும் நிறைந்துநிற்றலால் மலமூன்றுங் கெடாமல் நின்றே புண்ணிய பாவங்களை ஆர்ச்சிக்கவேண்டுமாதலால் [1][மாயையின் தோற்றமாயுள்ள சரீர தொந்தனை ஒன்றுக் கொன்று விடாமல் மேன்மேலுந் தொன்றுதொட்டு வரும்]; நிற்சமம் - உன்னைப்போல் அந்த மலங்களும் அனுதியாம்; ஆயின் நிற்பெறல் இல்லென மொழிந்த தொல்லறந் தனக்குமேயாதாகும்- அப்படியாகையால் உனக்கொப் பொன்றில்லையென்ற பழைய நூலுக்கு இத்தன்மை பொருந்தாததனால்; நாயெனுளத்து நின்றனை யென்பனை - அடியேனிடத்தில் அனுதியிலே நின்று யென்பேனை; நின்றிலை யென்பனை - அடியேனிடத்தில்

1. இப்பகுதிக்குரிய உரை ஏட்டுப்பிரதியில் காணப்படவில்லை.

அனுதியிலே நின்றுயில்லை யென்பனை; பொன்றிய பொன்றிற்றில் மலமென்பனை - மலமானது கெட்டதென்பதுவோ நின்ற தென்பதுவோ யாதுசொல்வேன்; ஒன்றினை யுரைத்தருள் மன்ற - இவற்றினென்றை யெனக்குத் தெரிய நிச்சயமாக அருள்வாயாக; குன்றுப் பெண்ணைப் புனல்வயல் வெண்ணெய்க் கதிபதி கை கண் தலை வாய் கால் செவி மூக்கு உயர் மெய்கொண்டு என்னினை வேரறப்பறித்த மெய்கண்டதேவ வினையிலை மைகொண்ட கண்ட வழுவில் என் மதியே - கேடுபடாத பெண்ணையாற்றுப் புனல் சூழப்பட்ட வயலையுடைத்தாகிய திருவெண்ணெய்நல்லூருக்கு நாயகமே கையுங் கண்ணுந் தலையும் வாயுங் காலுஞ் செவியும் மூக்கு மென்னும் அவயவங்களை யுடையதொரு திருமேனியைக் கொண்டு எனது வினையை வேரறப் பறித்த [மெய்கண்ட தேவனே கன்ம தொந்தனை யில்லாதவனே] நீலகண்டனே பழுதில்லாத என்னறிவா யுள்ளவனே அருள்வாயாக என்றவாறு.

இச்செய்யுள் மலம் அனுதியென்னு முறைமையும் முத்தியைப் பெற்ற ஆன்மாக்களிடத்து மலமில்லையென்னு முறைமையும அறி வித்தது.

(வி - ம்) சமம் - ஒப்பு; அனுதி. மலத்தின் இயல்பு வருமாறு:

"நெல்லினுக்குத் தவிடுமிகள் அனாதி யாயே
நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றவிலை நிகழ்த்தீர்
சொல்லியிடில் துகளற்ற அரிசியின்பால் இல்லை
தொக்கிருந்து மற்றொருநெல் தோன்றி டாவாம்
மெல்ல இவை விடும்அறிவே யிவைபோல அணுவை
மேவும்மலம் உடல்கன்மம் அனாதிவிட்டே நீங்கும்
நல்லசிவ முத்தியின்கட் பெத்தான் மாலை
நணுகிநிற்கும் ஆதலால் நாசமும்இன் றுமே."

—சிவஞானசித்தியார். சுக - சூ. (கூ)

மதிநின்பா லிந்த மலத்தின்பால் நிற்க
விதியென்கொல் வெண்ணெய்வாழ் மெய்ய – பதிநின்பா
வந்தா லிதில்வரத்தில் வந்திரண்டும் பற்றுகிலேன்
எந்தா யிரண்டாமா றென்.

(உரை) மதிநின்பால் இந்த மலத்தின்பால் நிற்க விதி யென்கொல் வெண்ணெய்வாழ் மெய்ய பதி நின்பால் வந்தாலிதில் வரத்தில் வந்திரண்டும் பற்றுகிலேன் எந்தாய் இரண்டாமாறென் - என்னறிவானது நின்னறிவாலே யறியுமதாய் நிற்கப் பாச ஞானத்திலே வந்து உனனறிவை விட்டு அவையாய் நிற்கைக்குக் காரணமென்ன திருவெண்ணெய்நல்லூருக்குத் தலைவனைய மெய்

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

கண்டதேவனே இப்பாசஞானத்தை விட்டுப் பசுஞானத்திற் பற்றற்றுப் பதிஞானமாகிய நினதருளிற் கூடிய காலத்து இந்தப் பாசஞானமும் பசுஞானமும் பற்றுகின்றேனில்லே; எம்முடைய சுவாமியே என்னுடைய அறிவு இப்படி இரண்டு தன்மை யாவானேன் இதை இன்னதென அருள்வாயாக என்றவாறு.

(மி - ம்.) ஆருயிர் சார்ந்ததன் வண்ணமாய் நிற்குந்தன்மைத்து. அதுவருமாறு :

" இருளில் இருளாகி எல்லிடத்தில் எல்லாம்
பொருள்கள் இலதோ புவி." —திருவருட்பயன்-கசு.

" வந்தெனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை
வசமெனவே அத்துவா மார்க்க நோக்கி
ஐந்துபுலன் ஐம்பூதங் கரண மாதி
அடுத்தகுணம் அத்தனையும் அல்லே அல்லே
இந்தவுடல் அறிவறியா மையுநீ அல்லே
யாதொன்று பற்றின்அதன் இயல்பாய் நின்று
பந்தமறும் பரிங்கனைய சித்து நீஉன்
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மை யேம்யாம்."
—தாயு

" சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றறிதல்
சார்தரா சார்தரு நோய்." —திருக்குறள்-கூகூ. (கக)

எண்டிசை விளங்க இருட்படாம் போக்கி
முண்டக மலர்த்தி மூதறி வருளும்
மேதினி யுதய மெய்கண்ட தேவ
கோதில் அமுத குணப்பெருங் குன்ற
என்னி னுர்தலும் அகறலும் என்னைகொல்
உன்னிற் றுன்னியுன் னுவிடிற் பெயர்குவை
யென்னு மதுவே நின்னியல் பெனினே
வியங்கோ ளாளனு மாகி யியங்கலு
முண்டெனப் படுவை எண்தோள் முக்கண்
யாங்கணும் பிரியா தோங்குநின் னிலையின்
யான்வந் தணைந்து மீள்குவ னுயின்
ஆற்றுத்துய ருற்றோர் அணிநிழல் நசைஇ
வீற்றுவீற் றிழிதர வேண்டலும் வெறுத்தலு
மின்றச் சாயைக்கு நன்றுமன் னியல்பே
அனையை யாகுவை நினைவருங் காலே

இங்நிலே யதனின் ஏழையேற் கிரங்கி
நின்னை வெளிப்படுத் தோளிப்பை நீயேல்
அருள்மா ருகும் பெருமஅஃ தன்றியும்
நிற்பேற் றவர்க்கும் உற்பவ முண்டெனுஞ்
சொற்பெறும் அஃதித் தொல்லுல கில்லே
அவ்வவை யமைவுஞ் சால்பும் மயர்வறச்
சொல்லிற் சொல்லெதிர் சொல்லாச்
சொல்லே சொல்லுக சொல்லிறந் தோயே.

(உரை) எண்டிசை விளங்க இருட்படாம் போக்கி முண்டகம் மலர்த்தி மூதறிவருளும் மேதினி யுதய மெய்கண்டதேவ கோதில் அமுத குணப்பெருங் குன்ற - பிரபஞ்சத்தை மறைத்த இருளாகிய பிடையை நீக்கி எல்லாருங் காணப் பண்ணியுங் காந்தக்கல்லில் அக்கினியைத் தோற்றுவித்தும் தாமரையை யலர்வித்தும் உலர்வித்துஞ் செய்யும் முறைமைபோலவும் மிக்க அறிவைத்தரும் ஆதித்தனைப் போல உலகத்துக்கு வந்த ஞானதித்தனுகிய மெய்கண்ட தேவனே எனக்குத் துராலறத் (= துன்பமறத்) தரும் அமுதனே குணமாகிய பெரிய மலையே; என்னினுர்தலும் அகறலும் என்னைகொல் - என்னிடத்தில் ஒருகாற் பிரகாசிக் கிறதும் ஒருகாற் பிரகாசியாமலிருக்கிறதும் எப்படி யென்ன; உன்னிற்றுன்னி யுன்னுவிடிற் பெயர்குவை யென்னுமதுவே நின்னியல்பெனினே - உன்னைச் செறிந்தபோது செறிந்தும் உன்னைச் செறியாதபோது நீங்கியுஞ் செய்வை யென்பதுதானே உன்னியல்பென்று கூறின்; வியங்கோளாளனுமாகி இயங்கலு முண்டெனப் படுவை - கருணையாளனென்கிற மேற்கோளை யுடையவனென்கிறதும் உண்டாம்படி எப்படி; எண்தோள் முக்கண் யாங்கணும் பிரியாது ஓங்கு நின் நிலையின் யான் வந்தணைந்து மீளகுவனுயின் - மூன்று நயனமும் எட்டுப்புயமும் முதலியவற்றைக் கரந்து மானிடயாக்கையில் வெளிப்பட்டுவந்த மெய்கண்ட தேவனே ஒரிடத்திலும் நீக்கமற நின்ற நினது நிறைவிலே யான் வந்தணைந்து மீளகுவனுயின்; ஆற்றுத் துயருற்றோர் அணிநிழல் நசைஇ வீற்றுவீற் றிழிதர வேண்டலும் வெறுத்தலுமின்றச் சாயைக்கு நன்று மன்னியல்பே - நானுனது திருவடியிலே சேர்ந்து மீள்குவேனுயின் கோடைக்காலத்து வழித்துயருற்றோர் நிழல் கண்டால் அந்நிழலே யடைந்திருக்க விரும்புதலும் அதனை நீங்கிப் போகுதலுஞ் செய்யுமிடத்து அந்தச் சாயையானது வழிநடந்து துயருற்றோரை வாவென் றழைத்ததுமில்லைத் தனது கோட்டைக் குறைத்தோரை வெறுத்துத் தள்ளினது மில்லே யதுபோல ஆன்மாச் சென்று

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நீங்கச் சிவன் நினைவற்றிருந்தவனும்; அனையை யாகுவை - அதுவுமின்றி அங்கிழல் போல நீயும்சடமாவை; நினைவருங்காலை இங்கிலை யதனின் ஏழையேற் கிரங்கி நின்னை வெளிப்படுத் தொளிப்பை நீயேல்-நினைதற்கரிய பொருளாகிய நீதான் முன் சொன்ன சாயை[போல] அறிவற்ற எனக்கிரங்கி உன்னை யொருகாற் பிரகாசிப்பித்தும் ஒருகாற் பிரகாசியாமலும் இருப்பையாமாகில்; அருள் மாருகும் பெரும - உன்னருள் நீக்கமற்ற தென்பதற்கு மாறுபாடாகுந் தகிலவனே; அஃதின்றியும் நிற்பெற்றவர்க்கும் உற்பவமுண்டெனுஞ் சொற்பெறும் - அது வல்லாமலும் உனது திருவடியிலே சேர்ந்தவர்களுக்குஞ் சென்ன முண்டென்னுஞ் சொல்லுண்டாம்; அஃது இத்தொல்லுலகில்லை-உபாதியை நீங்கித் திருவடியடைந்த ஆன்மாக்களுக்குச் சென்ன முண்டாமென்பதுதான் இந்த உலகத்துளில்லை; அவ்வவை யமைவுஞ் சால்பும் மயர்வறச் சொல்லிற் சொல்லெதிர் சொல்லாச் சொல்லே சொல்லுக சொல்லிறந்தாரே - அனுதியில் அந்த மலங்களின் கூட்டமும் அனுதியில் உன்னை விட்டு நீங்காத முறைமையினையும் மயக்கமறப் பாதகப்படாமல் சொல்லுமிடத்து எதிர்த்துச் சொல்லாத சொல்லே சொல்லுவாயாகச் சொல்லுக் கெட்டாதவனே யென்றவாறு.

இச்செய்யுள், ஆன்மாச் சிவனிடத்துக் கூட்டுமளவில் மலங் கெட்டதோ நின்றதோ ஆன்மாத்தான் கூடி மீள்குவதோ நீ தான் கூடி மீள்குவையோ ஏதென்று சொல்லென வினாயதற்கு உத்தரம்:

அறிவிப்ப தொன்றறிவ தொன்றும் அறிவித்
தறியாத தொன்றென் றறிந்தும்—அறிவித்
தறிபொருளு டேகூடித் தன்னறிவு மாய்ந்து
பிறிவற்று நிற்பதே பேறு.

(வி-ம்.) "சொல்லுக சொல்லிப் பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து" (சூசஉ) என்னுந் திருக்குறட் கருத்து இதன்கண் சொல்லொடும் அமையப் பட்டுள்ளது நோக்கி இன்புறுக. (கூ)

இறந்தோய் கரணங்க ளெல்லாம் எனக்குச்
சிறந்தோ யெனினுமெய்த் தேவே - பிறந்துடனுங்
காயங் கொளவுங் கொளாமலும் கண்டதுநீ
ஆயன்கோல் பாதவத் தற்று.

(உரை) இறந்தோய் கரணங்களெல்லாம் எனக்குச் சிறந்தோய் எனினும் மெய்த்தேவே பிறந்துடனுங் காயங்கொளவும் கொளா

மலுங் கண்டது நீ ஆயன் கொல் பாதவத்தற்று-கருவி கரணங்க ளெல்லாங் கழன்று நின்ற நீ என்னிடத்து விட்டுநீங்காத சிறப் புண்டாயிருந்தாயாமாகிலும் மெய்கண்டதேவனே அடியேனெரு சரீரத்தை யெடுத்து அந்த உடம்பு தானுக நிற்கவும் அதிற் கூடாமலே (= கூடாமையை) நீ யுண்டாக்கின முறைமை எத்தன்மைத் தென்னில் இடையன் குறைத்த மரத்துக் கொக்கு மென்றவாறு.

இச்செய்யுள் மீளத்தோற்றிய பிரபஞ்சம் பேய்த்தேர்போலப் பொய்யாயிருந்ததெனக் கண்டுகூறியது.

(வி-ம்.) "இடையன் குறைத்த மரக்கொப்பு' கீழ் விழாமல் மரத்துடன் ஒட்டித் தொங்குவும் ஏனைய போல் மீட்டுந்தளிர்க்காமல் காய்ந்து விழும் எனக்கூறுவர். அவ்வாறன்று. இடையன் ஆடுகள் மேய்தற் பொருட்டுக் கொப்புகளை வெட்டிக்கொண்டு வந்து வீட்டு முற்றத்தில் நட்ட தறியில் ஆடுகளுக்கு எட்டு முறையில் கட்டி வைத் திருப்பன். அதுவே இடையன் குறைத்த மரக்கொப் பென்ப. (கூ)

அற்றதென் பாச முற்றதுன் கழலே
அருட்டுறை யுறையும் பொருட்சுவை ஞாத
வேறென் றிருந்த வென்னை யான்பெற
வேறின்மை கண்ட மெய்கண்ட தேவ
இருவினை யென்ப தென்னைகொல் அருளிய
மனமே காயம் வாக்கெனும் மூன்றின்
இதமே யகித மெனுமிவை யாயில்
கணத்திடை யழியுந் தினைத்துணை யாகா
காரணஞ் சடமதன் காரிய மஃதால்
ஆரணங் காம்வழி யடியேற் கென்னைகொல்
செயலென தாயினுஞ் செயலே வாராது
இயமன் செய்தி யிதற்கெனின் அமைவும்
பின்னையின் முகும் அன்னது மிங்குச்
செய்திக் குள்ள செயலவை யருத்தின்
மையல்தீர் இயமற்கு வழக்கில்லை மன்ன
ஒருவரே யமையு மொருவா வொருவற்கு
இருவரும் வேண்டி இறைவனு நின்றனை
நின்னது கருணை சொல்லள வின்றே
அமைத்தது துய்ப்பின் எமக்கணை வின்றும்
உள்ளது போகா தில்லது வாராது
உள்ளதே யுள்ள தெனுமுரை யதனுற்

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

கொள்ளும் வகையாற் கொளுத்திடு மாயின்
வள்ளன் மையெலா முன்னிட வமையும்
ஈய வேண்டு மெனும்விதி யின்ரும்
ஆயினு மென்னை யருந்துயர்ப் படுத்த
நாயி னேற்கு நன்றுமன் மாயக்
கருமமுங் கரும பந்தமுந்
தெருள வருளுஞ் சிவபெரு மானே.

(உரை) அற்றதென் பாசம் உற்றதுன் கழலே அருட்டுறை யுறையும் பொருட்சுவை காத வேறென்றிருந்த என்னை யான் பெற வேறின்மை கண்ட மெய்கண்டதேவ இருவினையென்பதை என்னை கொல் - ஊசல் கயிறறத் தரை தாரகமாவதுபோல என்னுடைய அறியாமை திருத்தமாகவேஅடியேன் பொருந்தினது உன்னுடைய பாதமே, திருவெண்ணெய் நல்லூரைத் திருப்படை வீடாகப் பெற்ற இன்பசொரூபியாகிய தலைவனே, இருளும் வெளியும்போல இரண்டென்றிருந்த என்னை [அடிமை யென்கிற முதலுங் கெடாமல்] உனக்கு இரவியும் நயனமும் போல அனன்னியமாகிய முறைமை யுணர்த்திய மெய்கண்ட தேவனே புண்ணியபாவ மென்று சொல்லப்பட்ட தெப்படி யென்னில் அதற்குத்தரம்: அருளிய மனமே காயம் வாக்கெனும் மூன்றின் இதமே யகித மெனுமிவை யாயில் - புண்ணியபாவமாவது ஏதென்று வினவில் பொருந்தப்பட்ட மனோவாக்குக் காயங்களால் ஏறும் இதமுமஹிதமு மென்கின்றீராயின்; கணத்திடையழியுந் தினைத்துணையாகா - இமைப்பொழுதிலே வேறுவேறு பலவாகப் புரியும் மனது இத்தன்மை யெல்லாம் ஆகமாட்டாது; காரணஞ் சடம் அதன் காரியம் அஃதால் ஆர் அணங்காம் வழி யடியேற் கென்னைகொல் - இந்தக் கன்மத்தை யுண்டாக்குங் காரணமாகிய மனோவாக்குக் காயங்கள் சடமாதலால் அடியேனுக்கு இது துக்கசுகங்களாக வருத்தும்படி எப்படி; செயல் எனதாயினுஞ் செயலே வாராது - அதனை ஆன்மாவாகிய வெனது செயலென்கின்றீராயின் யான் செய்த செயல்தான் வடிவுகொண்டு அனுபவிப்பதில்லையாம், அதுவொழிந்து எனதுடைய செயலாலே புண்ணியபாவமேறு மெனின் என்செயலும் நின்செயலன்றி வாராது என்றுமாம்; இயமன் செய்தி இதற்கெனின் அமைவும் - இந்தச் சுகதுக் கங்களையறிந்து செய்விப்பன் இயமனில் அச்சொல்கிற்க அமையுமது எதுதானென்னில்; பின்னையின்றுகும் அன்னது மிங்கு - இயமனே துக்கமுஞ் சுகமுஞ் செய்விப்பானில் உலகத்து இராசா செய்விப்பதில்லையாம், அது வொழிந்து இவ்விடத்து இயமனே புண்ணிய பாவங்களையறிந்து பொசிப்பிப்பானில் பின்பு

பொசிக்கக் கன்ம முண்டாகாதாகும் என்று சொல்வாருமுளர்; செய்திக்குள்ள செயலவை யருத்தின் மையல்தீர் இயமற்கு வழக்கில்லை மன்ன - அதனைச் செய்த கன்மத்துக்குத் தக்கது எல்லாம் பொசிப்பித்து மயக்கத்தைத் தீர்க்குமதற்கு முதன்மை இயமனுக்கில்லையாம், தலைவனே; ஒருவரே யமையும் ஒருவாவொருவர்க் கிருவரும் வேண்டா - அப்படியன்று, இராசாவும் இயமனுமாகிய இருவரும் துக்கசுகம் அருத்துவானேன் என்னின், கன்ம நீங்காத எனக்கு ஒருவரமையாதோ இருவரும் வேண்டுவதில்லை; இறைவனும் நின்றனை - இவ்விருவருமின்றி நீயுமொருவன் நின்றாய்; நின்னது கருணை சொல்லளவின்றே - நீயே யவர்களையுங் கொண்டு செய்விக்கின்றாயாமாகில் செய்விக்குங் காருண்ணியஞ் சொல்லுங்காலத்து அளவில்லையாம், அஃதெப்படி யென்னின்; அமைத்தது துய்ப்பின் எமக்கணவின்றும் - உனக்குள்ளதை நீ யனுபவிக்கிறு யென்கின்ற யாமாயின் அந்தக் கன்மம் எனக்குத் தானே வந்து கூடமாட்டாது, கூடுமாயின் நீரெனக்குச் சுவாமியாக வேண்டுவதில்லை; உள்ளது போகாது இல்லது வாராது உள்ளதே யுள்ளதினு முரையதனால் - அது வல்லது உள்ளதுன்னுலும் நீக்க வொண்ணாது, இல்லாதது உன்னுலுங் கூட்டவுமொண்ணாது, உள்ளதே உள்ளதெனுமாகையால்; கொள்ளும் வகையாற் கொளுத்திடுமாயின் வள்ளன்மை யெல்லா முள்ளிட வமையும் - நீ யவற்றுக்குச் செய்ததெதனின் அவற்றைக் கூட்டும் வகையறிந்து கூட்டினையாயின் உன் பெருமையை நினைக்கப்போதும் அதுவுமன்றி; ஈயவேண்டுமெனும் விதி யின்ரும் - நீ யிந்தக் கன்மங்களை யெனக்குச் செலுத்தவேணு மென்கிற முறைமையுமில்லையாம்; ஆயினும் என்னை அருந்துயர்ப் படுத்த நாயினேற்கு நன்று மன் - என குறையாற் செய்கின்ற யாயின் அடியேனைத் துயரத்திட்டுப் பார்த்திருப்பது உமது காருண்ணியத்துக்கு மிகவும் நன்று ஆதலால்; மாயக் கருமமுங் கருமபந்தமுந் தெருள வருளுஞ் சிவபெருமானே-அதனியே கன்ம முண்டென்னின் அது கன்மமும் அது வருகைக்கு முன்னமே யாகிய மாயையும் முன்பின் மயங்காமல் அருளிச்செய்யவேண்டும் எனக்குச் சுவாமியாக வந்த சிவனே யென்றவாறு.

இச்செய்யுள் கன்மங் கூட்டுமுறைமையை விளையது உத்தரம்:

செய்வான் வினையறியான் செய்தவினை தானறியா
எய்யா தவனுலும் எல்லையறச் - செய்தவினை[1]
எங்கோனுஞ் செய்தனவும் எவ்வெவர்க்கும் வெவ்வேறும்
அங்கே யறிவான் அரன்.

1 'செய்தவினை தானறியா எங்கோனும்' என்பது ஏட்டில் கண்ட பாடம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

(வி - ம்.) இதம் - புண்ணியம். அஇதம் - பாவம்.

இதமஇதங்களின் உண்மை வருமாறு :

" இதமஇ தங்கள் என்ப திகன்மன வாக்குக் காயத்து
இதமுயிர்க் குறுதி செய்தல் அஇதமற் றதுசெய் யாமை
இதமஇ தங்க ளெல்லாம் இறைவனே ஏற்றுக் கொண்டிங்
ஐதமஇ தத்தால் இன்பத் துன்பங்கள் ஈவன் அன்றே.
—சிவஞானசித்தியார், உ. உ - க0.

" அரசனுஞ் செய்வ தீசன் அருள்வழி யரும்பா வங்கள்
தரையுளோர் செய்யில் தீய தண்டலின் வைத்துத் தண்டத்
துரைசெய்து தீர்ப்பன் பின்பு சொல்வழி நடப்பர் தூ3யோர்
நிரயமுஞ் சேரார் அந்த நிரயமுன் நீர்மை யீதாம்."
—சித்தி, உ. உ-உக.

" ஊசல் கயிறறத் தரை தாரகம் " என்னும் உண்மை வருமாறு :
" ஊசல் கயிற்றற்றுற் றுய்தரையே யாந்துணையான் "
—சிவஞானபோதம், அ. ச-இன்ஏது. (கச)

மானமருஞ் சேங்கை மதில்வெண்ணெய் வாழ்மன்ன
போனவினை தானே பொருந்துமோ - யானதனில்
ஆவனே ஆக்காய் அமலனும் நின்னருள்தான்
தேவனே யாதுக்கோ தேர்.

(உரை) மானமருஞ் செங்கை மதில் வெண்ணெய் வாழ் மன்ன போனவினை தானே பொருந்துமோ யான் அதனில் ஆவனே ஆக்காய் அமலனும் நின்னருள்தான் தேவனே யாதுக்கோ தேர்- மானே யேந்துகிற சிவந்த கரத்தையுடையவனே, மதில்சூழ்ந் திருவெண்ணெய்நல்லூரில் வாழுந் தலைவனே, யான் புசித்துத் தொலைந்த வினை மீண்டு பொருந்தியதோ, யான் சென்று அதனைக் கூடினேனோ, தேவரீரும் விகாரியாய்க் கூடுதலில்லையே, ஆதலால் [நினமலராகிய உம்முடையரு அருள் யாது செய்வதாக நின்றது சுவாமியே விசாரித்தருளென்றவாறு.

எனவே வினை பொசிக்குமளவும் யானெனது விஞ்சுதலுண் டாய தெனவறிக.

(வி - ம்.) மானமருஞ் செங்கை - சிவபெருமானின் இடது திருக் கையில் மான் பொருந்தியுள்ள பொலிவு காணப்படும். மான் என்பது முதல் ஒலியாகிய நாத தத்துவத்தின் நற்குறிப்பாகும். அஃது உலகத் தோற்றத்திற்கும் உலகத்து வாழ் உயிர்கள் உய்தற்குரிய மறைமுறை களாகிய இறைநூல் வெளிப்பாட்டிற்கும் இன்றியமையாத தொன்று கும். அது திருவருளாற்றற் பகுதிய இடப்பால் அமைந்திருப்பதே ஏற்புடைத்தாம். (கஇ)

தேரா துரைப்பன் தெருமர லுளத்தோடு
பேரா தருளுதல் பெரியோர் கடனே
நின்னைக் கலப்ப தென்னுண் மையே
நின்னது நேர்மை சொல்மனத் தின்றே
எழுவகைத் தாதுவின் ஏழ்துகி லிரண்டும்
பெருமுழைக் குரம்பையிற் பெய்தகத் தடக்கி
நீக்கி யென்றனைப் போக்கற நிறுத்தி
இச்சை முதலிய எழுப்பி நடத்திடும்
விச்சை சாலவும் வியப்பது நிற்க
வாக்கும் மனமும் போக்குள தனுவுஞ்
சொல்லும் நினைவுஞ் செய்யுஞ் செயலும்
நல்லவுந் தீயவு மெல்லா மறிந்து
முறைபிற ழாமற் குறைவுநிறை வின்றுய்க்
காலமுந் தேசமும் மாலற வகுத்து
நடுவுநின் றருத்தலின் நடுவனு குதியே
சான்றோர் செய்தி மான்றிருப் பின்றே
சாலார் செயலே மாலா குவதே
அத்துவா மெத்தி யடங்கா வினைகளுஞ்
சுத்திசெய் தனையே ஒத்தகன் மத்திடை
நீங்கின வென்னை யூங்கூழ் வினைகளும்
ஆங்கவை யருத்துவ தாரைகொல் அதனுற்
கருமமு மருத்துங் கடனது வின்றுந்
தருமம் புரத்தல் பெருமைய தன்றே
கண்ணினுண் மணிய கருத்தினுட் கருத்த
வேண்ணெய் வேந்த மெய்கண்ட தேவ
இடர்ப்படு குரம்பையுள் இருத்தித்
துடைப்பதில் லாவரு டோன்றிடச் சோல்லே.

(உரை.) தேராதுரைப்பன் தெருமரலுளத்தொடு பேரா தருளுதல் பெரியோர் கடனே-பெரியோய் யான் இன்னமொன்று விசாரியாமல் விண்ணப்பஞ் செய்கிறன் தெளிவில்லாத உள்ளத் தொடுங் கூடுதலாதல, அஃதாவது தான், நீங்காது நிற்பது உனது முறைமை யாதலால்; நின்னைக் கலப்பதென் னுண்மையே-உன்னை நான் இப்போது புதிதாகக் கூடுவேனென்பது எனதுண்மையாம் : நின்னது நேர்மை சொல் மனத்தின்றே -

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நீ தான் இதற்கு நேர்வையோ வெலின் வாக்குமனத்துக்கு மெட்டாததாம்; எழுவகைத் தாதுவின் ஏழ்துளையிரண்டும் பெருமுழைக் குரம்பையிற் பெய்து அகத்தடக்கி நீக்கி என்றனைப் போக்கற நிறுத்தி இச்சை முதலிய எழுப்பி நடத்திடும் விச்சை சாலவும் வியப்பு அதுநிற்க - எனக்கு நீ சத்த தாதுக்களும் இவ்வாயிலேழும் பெருவாயி லிரண்டுமாகிய பெரிய குவைப் பாழிலே என்னை யாக்கி அதனகத்தடக்கி அவ்வறியாமையை நீக்கி மீண்டுந் தனது ஆக்கினையாலே போக்கற நிறுத்தி எனது இச்சா ஞானக்கிரியைகளை நீயே யெழுப்பி அவையிற்றை நடத்தியிடும் வித்தை மிகவும் ஆச்சரியமாம், அது நிற்க; வாக்கும் மனமும் போக்குள தனுவுஞ் சொல்லும் நினைவுஞ் செய்யுஞ் செயலும் கல்லவுந் தியவும் எல்லாமறிந்து முறை பிறழாமற் குறைவு நிறைவின்றுய்க் காலமுந் தேசமும் மாலற வகுத்து நடுவுநின்று அருத்தலின் நடுவனுகுதியே - அவரவர் மனவாக்குக் காயங்களானும் நீங்காச் சிறையாகிய அவ்வுடலானும் நினைத்துச் சொல்லிச் செய்தவற்றின் நன்மை தின்மையெல்லாம் நீ யறிந்து அது முன்பின் மாறுபடாமல் [புண்ணிய பாவ பலன்களை அனுபவிக்கத் தக்க காலங்களையும் அவற்றைப் பொசிக்கைக் கிருப்பிடமான தேசங்களையும் மயக்கமற வகுத்துப்] பொசிப் பித்துத் தனது பிரேரக முறைமை ஏறியுங் குறைந்து மில்லாமல் நடுவனுமாகி நின்றுய் அதனாலும்; சான்றோர் செய்தி மான்றிருப் பின்றே சாலார் செயலே மாலாகுவதே - ஞாதாக்கள் செயலறச் செய்கையாலே அவர்களுக்கு விரிவு கூட்டமில்லை, பொருந்தார் செய்தியே கூட்டுவது மயக்கம் ஆதலானும்; அத்துவா மெத்தி அடங்கா வினைகளுஞ் சுத்திசெய்தலையே ஒத்த கன்மத்திடை - கன்ம வொப்பில் மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவங் கலையென்று சொல்லப்பட்ட ஆறத்துவாவிலும் நீ நிறைந்திருக் கப்படாகின்ற சஞ்சித கன்மத்தையுஞ் சோதிக்கையால்; நீங்கின என்னை ஈங்கு ஊழ்வினைகளும் ஆங்கு அவை அருத்துவது ஆரை கொல் அதனால் - அவ்விடத்து ஊழ்வினைகளும் என்னை விட்டு நீங்கினவாகையாலே அவை யாரை வந்து பொசிப்பித்தன அதனால்; கருமமும் அருத்துங் கடனதுவின்றுந் தருமம் புரத்தல் பெருமையதன்றே - கன்மந்தானும் அனுபவிப்பவனிடத்துத் தானே பொருந்துவது மில்லையாம், நீ அக்கன்மத்துக் கீடாக நடத்துவையாகில் உன் பெருமைக்கும் அது பொருந்தாது, ஆகையால் கன்மம் நீங்கி அருளாமாறு எப்படி; கண்ணினுள் மணிய கருத்தினுட் கருத்த வெண்ணெய் வேந்த மெய்கண்டதேவ இடர்ப்படு குரம்பையுள் இருத்தித் துடைப்பதில்லா அருள் தோன்றிடச் சொல்லே - கண்ணிற் பாவையபோலவும் கருத்துள் அறிவுதோலவுமாகிய திருவெண்ணெய் நல்லூருக்கு நாயகமாகிய

மெய்கண்டதேவனை துக்கவுடலுள் வைத்து நீங்காத் திருவருள் ஏது சொல்லென்றவாறு.

இச்செய்யுள் கன்மம் நீங்கு முறைமையும் நீக்கினால் அவை போகிற முறைமையும் விளயது; உதாரம்: 'உடலுக் கமைத்த ஐயிரொடு நீங்கா - திடவரு[ள் கன்ம ம]ருத்தும்.'

(வி - ம்.) ஞாதாக்கள் - மெய்யுணர்வு கைவந்த தவத்தோர். சத்த தாதுக்கள் - எழுவகை முதற்பொருள். அவை வருமாறு:

சாரம், செங்நீர், ஊன், கொழுப்பு, எலும்பு, மூளை, வெண்ணீர் என்பன. (இரசம், இரத்தம், மாமிசம், மேதஸ், அஸ்தி, மச்சை, சுக்கிலம்.)

துளை ஒன்பதும் வருமாறு: கண்ணிரண்டு, செவியிரண்டு, மூக்குத் துளையிரண்டு, வாய் ஒன்று, எருவாய் ஒன்று. கருவாய் ஒன்று என்பன.

ஆறத்துவாக்களிலும் கட்டுப்பட்டுள்ள எஞ்சு (சஞ்சித) வினை நீக்கம் வருமாறு:

"விரும்பியமந் திராதிகாரம் அர்ச்சனாதி காரம்
மேவுமியோ காதிகாரம் எனச்சமய விசேடம்
வரும்பொருவில் நிருவாண மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள்
இரங்கடைவில் தொகைபதினெண் றென்பத்தொள் றைம்பத்
நிருநூற்றே டிருபத்து நாலாறு றைந்நிற் [தொன்
பரந்தநெறி அறுவகையும் ஒருவினையே வரிதாம்
பரபதத்துள் உயிர்விரவப் பயிற்றும் அன்றே."

—சிவப்பிரகாசம் - கூ.

"செறுவிப் பார்சில யால்மதில் தீர்த்தங்கள்
உறுவிப் பார்பல பத்தர்கள் ஊழ்வினை
அறுவிப் பாரது அன்றியும் நல்வினை
பெறுவிப் பாரவர் பேரெயி லாளரே."

—இ. கசு - கூ.

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துளுற்று பவர்."

—திருக்குறள், கூஉ0.

துணையின்றி எத்தொழிலுஞ் செய்ய முடியாத இயல்பினையுடைய ஆருயிர்கள் ஊழினை உப்பக்கங்காண்பதற்கும் ஓர் அரிய பெரிய முடிவி லாற்றலுடையதன் துணை வேண்டும். அதுவே தெய்வத் துணை என்பது. இவ்வுண்மையைத்தான் மேலேயுள்ள "செறுவிப்பார்" என்னுந் திருப்பாட்டில் திருவள்ளுவநாயனார் அருளியுள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நோய் நீங்க மருத்துவனும், அறியாமை நீங்க ஆசானும், வறுமை நீங்க உழைப்பாளர் உண்டாக்கும் பொருள்களை வாங்கிப் பயன்படுத்து வோரும் துணை நிற்கின்றனர். அது போல் ஊழை உப்பக்கங்காணத் தெய்வத்துணை இன்றியமையாது வேண்டப்படும் என்க.

இவ்வுண்மையைப் பள்ளிப்பயிற்சியாக யாண்டும் பரப்பவுன்னிய தமிழ் மூதாட்டியார் வருமாறு பாடியுள்ளார்.

" சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாயம் ஒருநாளு மில்லை—உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்." — நல்வழி, கடு (கசு.)

சோற்றெழும்பு கொள்ளநீ சூழ்ந்ததுவும் நிற்செயல்கள்
மற்றவர்கள் நின்னோக்கின் மாய்ந்தவுயிர்க் - குற்ற
மொளித்தியாங் கைய வுயர்வெண்ணெய் நல்லூர்க்
குளித்தமதுக் கொன்றையெங் கோ.

(உரை) சொற்றெழும்பு கொள்ளநீ சூழ்ந்ததுவும் நிற்செயல்கள் மற்றவர்கள் நின் நோக்கின் மாய்ந்த வுயிர்க்குற்ற மொளித்தியாங்கு ஐய உயர் வெண்ணெய்நல்லூர் குளித்த மதுக் கொன்றை எங்கோ - உயர்ந்த வெண்ணெய் நல்லூருக்குக் கர்த்தாவாகி மதுவின் மூழ்கிய கொன்றைமலரைப் புனைந்த எம்முடைய சுவாமியே, நீ கன்மம் நீக்குமளவில் உனது சொல்வழி யடிமையாகச் செய்யலாமாயின், உன் செயலென்னுத பெத்தரும் நினது பான்மையை நீங்காதுநிற்க உயிர் கேடுபடாநின்றது, உன்னை நீங்காது நிற்பாரெல்லாரு மொப்பச் சிலர்க்குக்குற்றமெவ்விடத்தே போயது கொல்லென்றவாறு.

இச்செய்யுள், செயலற நிற்க மலம்போனபடி எப்படியென்று வினயது ; உத்தரம் :

நின்செயலிற் றம்மைக் கொடுத்தார் வினைதீர்த்தார்
துன்பமற மாயைத் துடக்கறுமே - முன்புமலந்
தான்கெடாச் சத்தி கெடுமாமிக் காயவிருள்
வான்கெடா வாளொளிவந் தால்.

இத்துணையும் வினவாக்கி மேற்கூறியவையிற்றுக்கு உத்தரவாதமாக நின்றது.

(வி - ம்.) ஆருயிர்கள் தற்செயலற்றுச் சிவன் திருவாணைவழி நிற்பின் அவ்வுயிர் அடிமையாய் விடும் அப்பொழுது அடிமையாயினர் வழி நிகழும் நன்றுந் தீதும் ஆண்டவன் செயலேயாம். தன்முனைப் பின்மையே அவாவறலாம். அவாவற்றார்க்குச் சிவனடியின்பம் இடையறாது பெருகும். இவ்வுண்மைகள் வருமாறு :

" அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட் கொண்டபோதே கொண்டிலியோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோன் முக்கண் எம்மான
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானே இதற்கு நாயகமே. [னே
—அ. குழைத்தபத்து, எ.

அடியேனைக் கொண்டு நன்றும் பிழையும் செய்விப்பாய், நான் இதற்குப் பொறுப்புடையனுகேன் என்பதாம்.

" இன்பம் இடையறு தீண்டும் அவாவென்னும்
துன்பத்துட் டுன்பங் கெடின்." —திருக்குறள், உசுக, (கவ.)

கோலங் கொண்ட வாறுண ராதே
ஞாலங் காவலன் யானெனக் கோளீஇப்
பொய்யை மெய்யெனப் புகன்று வையத்
தோடாப் பூட்கை நாடி நாடா
என்னுட் கரந்தென் பின்வந் தருளி
என்னையுந் தன்னையு மறிவின் றியற்றி
என்னது யானெனு மகந்தையுங் கண்டு
யாவயின் யாவையும் யாங்கணுஞ் சென்று
புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்ந்து
மிக்க போகம் விதியால் விளைத்திட்டு
எற்பணி யாளாய் எனைப்பிரி யாதே
ஓடி மீள்கென ஆடல் பார்த்திட்டு
என்வழி நின்றனன் எந்தை யன்னே
அருள்மிக வுடைமையின் அருட்டுறை வந்து
பொருள்மிக அருள்தலும் போய்ப்பகை யாதலுங்
கைகண்டு கொள்ளெனக் கடலுல கறிய
மெய்கண்ட தேவன் எனப்பெயர் விரீஇத்
தன்னுட் கரந்து தான்முன் னுகித்
தன்னதுந் தானுமா யென்னையின் றுக்கித்
தன்னையு மென்னையுந் தந்து தனது
செய்யா மையுமென் செயலின் மையும்
எம்மான் காட்டி யெய்தல்
அம்மா எனக்கே அதிசயந் தருமே.

(உரை) கோலங் கொண்டவாறு உணராதே ஞாலங் காவலன் யான் எனக் கொளீஇப் பொய்யை மெய்யெனப் புகன்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

வையத்து ஒடாப் பூட்கை நாடி நாடா - தேவரீர் திருமேனி கொண்ட முறைமையை யுணராமல் பிரபஞ்சத்துக்கு நானே கர்த்தாவென்னக் கொண்டு, பிரபஞ்சத்தை ஊராத பேய்த்தேரின் செலவை விசாரித்து அறியாதாரைப் போல, அசத்தாகிய பிரபஞ்சத்தைச் சத்தெனக் கருதிக்கொண்டிருக்கிற; என்னுள் கரந்து - எனக்குள்ளே மறைந்து; என்பின் வந்தருளி - என்னை முன்னுக்கித் தான் எனக்குப்பின் வந்து; என்னையும் தன்னையும் அறிவின்றியற்றி - தன்னையும் என்னையும் அறியாதபடி யியற்றி; என்னது யானெனினும் அகந்தையுங் கண்டு - யானெனதென்னும் அகந்தையு முண்டாக்கி; யாவயின் யாவையும் யாங்கணுஞ் சென்று புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்ந்து - எந்த யோனியிலும் எந்த வுலகத்தும் நான் சென்று புக்கவிடமெங்கும் புக்கு மீண்டவிடமெங்கும் தானும் மீண்டு; மிக்க போகம் விதியால் விளைத்திட்டு - எனக்கு மிகுத்த புசிப்புக்களைத் தப்பாமல் விளைத்து; எற்பணியாளாய் எனைப் பிரியாதே - எனக்குப் பண்ணைக்காரனுகிய ஏவலாளாய் என்னைவிட்டு நீங்காதே; ஒடி மீள்கென ஆடல் பார்த்திட்டு என்வழி நின்றனன் எந்தை - வில்லொடு குத்தி விளையாட விடுமாபோல ஓடித் திரியும் ஆடலைக் கண்டு முன்னெல்லாம் என்வழி நின்றாய், எனக்குச் சுவாமியா யுள்ளவனே; அன்னே - அய்யோ அய்யோ; அருள் மிகவுடைமையின் [1] அருட்டுறை வந்து - தலைக்கு அருளே மிகுந்த செல்வமாகிய திருக்கையாலே திருவெண்ணெய்நல்லூரிலே திருமேனி கொண்டு வந்து; பொருள் மிக அருள்தலும் பொய்ப்பகையாதலுங் கைகண்டுகொள்ளெனக் கடலுலகறிய மெய்கண்டதேவன் எனப் பெயர் விரிஇ - நீ எல்லாப் பொருளையுங் கூட்டுதலும் கூட்டியும் பொய்க்குப் பகையும் மெய்க்கு உறவுமாய் நிற்றலை எனக்குக் காண்பிப்பான்பொருட்டுத் தண்கடல் சூழ்ந்த உலகமறிய மெய் காணுத ஆன்மாக்களுக்கு மெய்யைக் காண்பித்த தெய்வ மென்னும் பெயரை விரித்து நிறுத்தி; தன்னுட் கரந்து தான் முன்னுகி தன்னதுந் தானுமாய் என்னை இன்றுக்கி-தனக்குள்ளே என்னையடக்கித் தான் என்பின் செல்வதன்றித் தன் செயலுந் தானுமல்லது என் செயலையும் என்னையும் இன்றுக்கி; தன்னையு மென்னையுந் தந்து-என்னுண்மையுந் தன்னுண்மையும் அறியும்படி யுணர்த்தி; தனது செய்யாமையும் என் செயலின்மையும் எம்மான் காட்டி - தான் சகலவித்தையும் ஆன்மாக்களுக்குக் கன்மத்துக் கீடாகக் கூட்டிப் பொசிப்பிக்கையிலே தான் அதிற் பணியற்று

1. அருட்டுறை: திருவெண்ணெய் நல்லூரிலுள்ள சிவாலயம். 'பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் அத்தா' என்பது சுந்தரர் தேவாரம்.

நிற்கிற முறைமையையும் யான் அதிலே கூடி அதுவதுவாக மோத்துண்கையிலே எனக்கொரு செயலற்று நிற்கும் தன்மையையுந் தலைவன் காட்டினது; எய்தல் அம்மா எனக்கே அதிசயந் தருமே - எனக்கு ஏறப் பொருந்துகையாலே ஆச்சரியம் எனக்கே தருமென்றவாறு. அம்மா வென்றது கேட்பிக்கும்; பூட்கைக் கிளவி மேற்கோளாம்.

இச்செய்யுள் சிவன் நின்று நடத்துகிற முறைமை யறிவித்தது.

(வி - ம்.) கண்டு - உண்டாக்கி. போகம் - புசிப்பு. பணியான் - பண்ணையாளர்; வேலையாள். ஆருயிர்கள் கட்டு ஒட்டு இரண்டிலும் ஆண்டவன்வழி நிற்கும் உண்மை வருமாறு:

" ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஒட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணு தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே."

—க. கடி - க

" முந்திய ஒருமை யாலே மொழிந்தவை கேட்டல் கேட்டல்
சிந்தனை செய்தல் உண்மை தெளிந்திடல் அதுதானுக
வந்தவா றெய்தல் நிட்டை மருவுதல் என்று நான்காம்
இந்தவா றடைந்தோர் முத்தி எய்திய இயல்பி னோரே."

—சிவப்பிரகாசம், அக. (கஅ)

தருமா தருமத் தலைநின்றுழ் வேனைக்
கருமா கடல்விடமுண் கண்டப் - பெருமான்
திருவெண்ணெய் நல்லூர்ச் சுவேத வனத்தான்
உருவென்ன வந்தெடுத்தா னுற்று.

(உரை) தருமம் அதருமத் தலைநின்றுழல் வேனைக் கருமா கடல்விடமுண் கண்டப் பெருமான் திருவெண்ணெய்நல்லூர்ச் சுவேதவனத்தான் உருவென்ன வந்தெடுத்தான் உற்று - புண்ணிய பாவங்களின் எல்லை நீங்காது திரியும் என்னை அவ்வினை துலையெனப்பற்றுதலாலே, மால் பிரமன் முதலிய தேவர் இறந்துபோகாமற் கருணையாலே பெரிய கடலில் விடத்தையுண்டு உய்யக்கொண்ட நீலகண்டனுகிய தலைவன் திருவெண்ணெய்

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நல்லூரிலெழுந்தருளிச் சுவேதவனப் பெருமாளென்னும் பிள்ளைத் திருநாமத்தையுமுடைய மெய்கண்டதேவன் இவ்வடிவிலே யான் ஈடேறும்படி என்னை யடிமையாகக் கொண்டான் பற்றி யென்றவாறு.

இச்செய்யுள் பரமேசுவரன் பக்குவமறிந்து இரட்சிப்பனென் பது சொல்லிற்று.

(வி - ம்.) இருவினை துலையொத்த லென்பது, ஆருயிர் ஆண்டா னுக்கு அடிமைப்பட்டபின் அதன் அகமுயற்சி ஆண்டவனின் இறவாத உணர்வின்பத் துய்ப்பிலேயே அமுந்தி நிற்கும். அதன் புற முயற்சி எதுவாலுலும் அவை இறைபணியே யாகும். அவ்வுயிர் அவனுடைய கைக்கருவியே யாம். அவ்வுயிர்க்கு அச்செயலிலும் அதன் பயனிலும் விருப்பு வெறுப்பு உண்டாகா. அப்படி யிருப்பதால் ஊழ்வினை நுகர் விலும் விருப்பு வெறுப்புச் செல்லா. அதனல் அப்பயன் அவ்வுயிர்க்கு உடலூழாய்க் கழியும். இவையே இருவினை யொப்பாம்.

பக்குவங்கண்டு இரட்சிப்பன் என்னும் உண்மை "பக்குவங்கண் டரிவிக்கும் பான்மையேன் யான்."

எனத் தாமானவர் அருளிய திருப்பாட்டான் உணர்க. (கக)

உற்றவர் பெற்றவ ரற்றவர் முற்றும்
அற்றவர்க் கற்றவன் அல்லவர்க் கல்லவன்
அந்த மாதி யில்லவன் வந்து
குரக்கு மனத்துக் கொடியேன் பரக்கும்
பரப்பைக் குவித்து நிறுத்திப் பிடித்திட்டு
இருள்வெளி யாகும் மருளினை யறுத்து
வந்து புகுதலுஞ் சென்று நீங்கலும்
இன்றி யோன்றுய் நின்றஅந் நிலையில்
ஒன்று காமல் இரண்டா காமல்
ஒன்று மிரண்டு மின்று காமல்
தன்னது பெருமை தாக்கா னுயினும்
என்னது பெருமை யெல்லா மெய்தித்
தன்னை யெனக்குத் தருவதை யன்றியும்
என்னையு மெனக்கே தந்து தன்னது
பேரா நந்தப் பெருங்கட லதனுள்
ஆரா வின்ப மளித்துத் தீரா
உள்ளும் புறம்பு மொழிவின்றி நின்ற
வள்ளன்மை காட்டி மலரடி யருளிய
மன்ன னெங்கோன் வார்புனற் பெண்ணை

20 வேணணெய் காவலன் மெய்கண்ட தேவன்
அண்ணல் அருளா லயத்தன் நண்ணிய
மலமூத லாயின மாய்க்கும்
உலக வுயிர்க்கெல் லாமோரு கண்ணே.

(உரை) உற்றவர் பெற்றவர் அற்றவர் முற்றும் அற்றவர்க் கற்றவன் அல்லவர்க் கல்லவன் அந்தமாதி யில்லவன் வந்து - ஆசாரியனருளிச் செய்த உண்மையிலே பொருந்தினவர்கள் அதனைச் சிந்திக்கப்பெற்றவர்கள் அந்த உண்மையிலே முழுதும் தன்னைக் கொடுத்துத் தானதுவாய்த் தன் செயலற்றவர்க்குத் தான் அவர் செயலாய் நிற்கிறவன் தானென்றும் அவனென்றும் இரண்டுபட்டவர்களுக்கு வேறுபட்டிருக்கிறவன் [illegible]காற்றமும் ஈறும் இல்லாதவன் திருமேனி கொண்டு வந்[illegible] மனத்துக் கொடியேன் பரக்கும் பரப்பைக் குவித்[illegible] பிடித்திட்டு - குரங்குபோலே ஒரிடத்து நிலையில்லா[illegible]டைய கொடிய வினையேன் உழன்று திரியும் வரு[illegible]டுத்து ஒரு நிலையிலே நிறுத்தி என்னை யடிமை பி[illegible] என்னும்படி காட்டி; இருள் வெளியாகும் மருளினை [illegible] வெளியும் இருளுமாகிய மயக்கத்தைக் கெடுத்து இவை [illegible]ல்லவும் நின்ற நிலை காட்டி; வந்து புகுதலுஞ் சென்று [illegible] ஒன்றுய் நின்ற அந்நிலையில் - கண்ணிற்படலத்தை [illegible] துரித்த விடத்துக் கண்ணொளியைச் சூரியப்பிரகாச[illegible] கூடவுமில்லை சூரியப்பிரகாசத்திலே கண்ணொளிபோய்க்[illegible]னது மில்லையதுபோல, தானும் புதிதாக வந்து பொருந்[illegible]லும் கூடினவர் சென்று நீங்கிப்போகலும் இல்லாதபடி, எகமாய் அப்படி நின்றநிலை தான்; ஒன்றுகாமல் - பொன்னும் பணியும் போல ஒன்றென்னும் மாயாவாதமுமல்லவாய் உடலும் உயிரும் போல வொன்றுய்; இரண்டாகாமல் - இருளும் வெளியும்போல இரண்டாயிருக்கிற பேதவாதமுமல்லவாய் கண்ணும் ஆதித்தனும் போலவிரண்டாய்; ஒன்றுமிரண்டு மின்றுகாமல் - சத்தமும் அத்தமும் (=பொருளும்) இரண்டாயிருந்து பின்பு ஒன்றுனது போல ஆன்மாவென்றுஞ் சிவனென்றும் இரண்டாயிருந்து முத்தியில் ஒன்றுமென்னும் பாற்கரியன் மதமுமல்லவாய் ஆன்மாவும் ஆன்மஞானமும்போல இரண்டாயிருந்து ஒன்றுவதாய்; தன்னது பெருமை தாக்கானுயினும் என்னது பெருமை எல்லா மெய்தி - தனது முதன்மையாகிய பஞ்சகிருத்தியம் எனக்குத் தாரானுயினும் எனக்குப் பெருமையாகிய பாச சாலங்களெல்லாந் தான் முன்னின்று மேற்போட்டுக்கொண்டு தன்னை எனக்குத் தருவதையன்றியும்; என்னையும் எனக்குத் தந்து - தன்னுண்மை

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

112

யான் பெறுவதன்றி என்னுண்மை யான் பெறும்படி தந்து; தன்னது போனந்தப் பெருங்கடலதனுள் ஆராவின்பம் அளித்து-தனதாகிய பேரானந்தக் கடலுள் அமையாத அமுதம் எனக்குத் தந்து; நீரா உள்ளும் புறம்பும் ஒழிவின்றி நின்ற வள்ளன்மை காட்டி மலரடி யருளிய - நீக்கமற்று உள்ளேனும் புறம்பேனுந் தெரியாதபடி யொழிவற நிறைந்த தலைமையைக் காட்டித் தனது திருவடியைத் தந்த; மன்னன் - ஞானராசா; எங்கோன் - எம்முடைய சுவாமியா யுள்ளவன்; வார்புனற் பெண்ணை வெண்ணெய் காவலன் மெய்கண்டதேவன் அண்ணல் அருளாலயத்தன் - ஒழுக்கருத புனல்பொருந்திய பெண்ணையால் சூழப்பட்ட திருவெண்ணெய் நல்லூருக்குத் தலைவனுகிய மெய்கண்டதேவன், சருவான்மாக்களுக்குங் கருத்தா, என்னுடைய உள்ளமே (தன் அருளே?) கோயிலாகக் கொண்டவன்; நண்ணிய மலம் முதலாயின மாய்க்கும் உலக உயிர்க்கெல்லாம் ஒரு கண்ணே - பொருந்தி ஆணவமலத்தை லிங்கமூர்த்தமாய் வந்து கெடாமற் கெடுத்தும் மாயையைக் குருமூர்த்தமாய் வந்து கெடாமற்கெடுத்தும் கன்மத்தைச் சங்கமமூர்த்தமாய் வந்து கெடாமற்கெடுத்தும், இப்படி வந்த மூன்று மூதலும் பிரபஞ்சத்துக்கும் ஆன்மாக்களுக்கு மிடமும் ஒரு முதலே யென்றவாறு.

இச்செய்யுள் கர்த்தரை விரிவித்த முறைமை கூறியது.

இருவர் விதுப துணரியெழுதி னேன்முன்
ஒருவா னிறைப் முணர்ந்தோன் - அருளுடம்பாம்
பன்புடைய சிற்றம் பலநாடி தாள்பணிவோன்
சன்பைநகர்த் தத்துவநா தன்.

(வி - ம்.) தன்னது பெருமை - தனக்கேயுரிய திருவைந்தொழில்.

மெய்ப்புணர்ப்பாம் அத்துவிதம் வருமாறு:

" புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப்
புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளிபோல் பேதமுஞ்சொற் பொருள் [போல்
பேதாபே தமும்இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்தினுல் விளைவதாய் உடலுயிர்கண் அருக்கன்
அறிவொளிபோல் பிரிவரும் அத்துவித மாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றும்."

—சிவப்பிரகாசம், எ, (உ0)

அசேதநமாகிய தத்தம் உடல்களைக் கொண்டு செயல் செய்யும் உண்மை கண்கூடாகக் காணும் மெய்ம்மையாகும். அதுபோல்

இறைவனும் ஆன்மாக்களைக் கொண்டு அசேதநமாகிய ஆற்றலைத் தருவதாகின்றனன்.

அவ்வுண்மை வருமாறு:

கைகொடுக்கக் கால்நடக்கக் காணினும்யாம் அப்பொறியாம்
மெய்யால் உயிர்கொடுக்கும் மெய்மேவும்—செய்விக்கும்
முன்னேனே கொடுப்பிக்கும் என்பர்முன்னோர் முன்னேனும்
முன்னுக்கால் செய்கைமுகிழ்க் காதும்.

நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக்கடவேன் கானேதான் என்ன தோவிங் கதிகாரம்
காயத் திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

—அ. குமரகுருபரம்-அ

Center for Shaiva Studies, Pondicherry Collection
CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Eupding Taltva Heritage Foundation, Kolkatta and IKS-MOE